பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -295

## கொரோனாவை கட்டுப்படுத்த வேண்டும்! அல்லது பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும்! சிக்கலில் கோட்டா?



## இத்தாலியை விடவும் இலங்கையில் மிக மோசமாக கொரோனா பரவும் அபாயம் - மாவை




## ஆபாசத்தில் பலரையும் மிரட்டும் சமூக வலையத்தளங்கள் - சட்டத்தரணி

# கொரோனாவை கட்டுப்படுத்த வேண்டும்! அல்லது பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும்! – சிக்கலில் கோட்டா?

மனிதநேயமற்ற செயற்பாடுகள் இந்த நாட்டில் கட்டுப்படுத்தப்படுகின்றது என்று அடிக்கொருமுறை கூறினாலும் மனிதநேயமற்ற செயற்பாடுகளினால் இந்த நாடும், நாட்டு மக்களும் பாதிக்கப்படுகின்றனர். கொரோனா தொற்று நோய் என்பது தனியே இலங்கைக்கு மட்டும் வந்திருந்தால் அதனை பல நாடுகள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும், பல நாட்டு மக்களும் உதவி செய்திருப்பார்கள். மக்களுக்கு வறுமை நிலை தலைவிரித்து ஆடியிருக்காது. ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் வறுமையினால் ஒரு சாரார் இறந்து கொண்டிருக்க, நோயினால் ஒருசாரார் இறந்து கொண்டிருக்க, விரக்தியினால் ஒரு சாரார் இறந்துகொண்டிருக்க இவ்வாறாக எமது நாட்டின் இறப்பு வீதம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. தற்பொழுது வரை 467 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பதாக இலங்கையின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



இலங்கையில் தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் கூறுவதில் முன் அரசாங்கம் தீவிரம் காட்டியது. ஆனால் தற்பொழுது தொற்று கூடுதலாக இருப்பதை கூற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி தொற்று எண்ணிக்கையை குறைத்து மக்களை சிறிது நாட்களுக்குள் வெளியே செல்வதற்கு அனுமதித்ததன் விளைவு இன்று இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அனுபவிக்க தொடங்கி விட்டார்கள். கொரோனா தொற்றின் தாக்கம் என்பது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே இருக்கிறது. வெலிசறை கடற்படை முகாமில் இதுவரை 75 பேர் தொற்றுக்குள்ளாகி இருப்பதாக தெரியவருகிறது. இவ் நிலை ஏன் உருவாகியது. ஆரம்பத்திலேயே இதற்கான கட்டுப்பாடுகளை மேற்கொண்டிருந்தால் இந்த இராணுவ வீரர்களும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். இராணுவ முகாமும் மூட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

தேர்தலை எப்படியாவது நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் மும்முரமாக செயற்பட்டார். ஊரடங்கு சட்டத்தை தளர்த்தினார். ஊரடங்கு சட்டத்தை தளர்த்தியதனுடைய விளைவு மாவட்டங்களை விட்டு மாவட்டங்கள் செல்லக்கூடிய நிலைமை உருவானது, குறித்த கிராமங்களை விட்டு கிராமங்களுக்கு செல்லும் நிலை உருவானது. தொற்றுக்குள்ளானவர்கள் அல்லது ஏனையவர்கள் தொற்றுக்குள்ளானவர்களை சந்தித்தது தொடர்பில் மருத்துவர்களுக்கு இச் செய்தியினை மறைத்து வைத்ததன் விளைவே கொரோனா தொற்றின் அறுவடையாக உள்ளது. தேர்தலை வைக்க மும்முரமாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் தோல்வியிலே தற்பொழுது முடிவடைந்துள்ளது. பெரும்பான்மை சிங்கள சமூகத்தில் இந்த தொற்று அதிகரித்ததன் விளைவு தான் தற்பொழுது இந்த தேர்தலை இடை நிறுத்துவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை தென்னிலங்கையில் அதிகரித்ததன் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். தேர்தல் முக்கியமில்லை மக்களின் எதிர்காலமே எமக்கு முக்கியம் என்றும் அவர் கூறியிருந்தார். தாம் எப்படியாவது தேர்தலிலே வெற்றி பெறுவோம் என்ற கருத்தினையும் அதனோடு கூடுதலாக கூறியுள்ளார். முடிந்த வரை கொரோனா தொற்று இருக்கும் பொழுதே தேர்தலுக்கான நடவடிக்கைகளையும் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை கையாளுகின்றது.

இவ் விவகாரம் தோல்வியில் முடிவடையவே கொரோனா தொற்று அதிகரித்து விட்டது. தற்போதைய காலகட்டத்தில் தேர்தலை வைத்தால் அது பாரதூரமான விளைவுகளை சந்திக்கும் என்ற காரணத்தினால் சுத்துமாத்து பேச்சுக்களை பேசுவது அரசியல்வாதிகளுக்கு புதிதான விடயமல்ல. அதனடிப்படையில் தேர்தல் தற்பொழுது அவசியமில்லை என்று பகீரங்கமாகவே பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்கள் அறிவித்தல் விடுத்துள்ளார். இது உண்மையிலே வரவேற்கத்தக்க விடயமாகும். ஆகவே மற்ற பக்கத்தில் பார்க்கும் பொழுது கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் என்ன விடயங்களை கையாண்டு கொண்டிருக்கின்றார் என்று பார்க்கும் பொழுது தொற்றுக்குள்ளானவர்களைத் தனிமைப் படுத் துவதற் கான முகாம்களை உருவாக்கியுள்ளார், மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள், ஊடகவியலாளர்கள், அத்தியாவசிய பொருட்கள் விற்பனையாளர்கள், அத்தியாவசிய பொருட்களை வழங்குனர்கள் அனைவரையும் சுயாதீனமாக செயற்பட அனுமதித்துள்ளார். இது உண்மையில் பாராட்டத்தக்க விடயம். ஆனாலும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் எல்லாம் எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டும் என்பதே.

இதில் அரசனை நம்பி புருஷனை கைவிடும் நிலைமை ஒன்றுமில்லை. இது உலகளாவிய ரீதியில் பரப்பப்பட்ட ஒரு வைரஸ் நோய் தற்பொழுது வரை 2 இலட்சத்தையும் தாண்டி உயிர் பலிகள் நிகழ்ந்துள்ளது. 28 இலட்சத்திற்கும் மேற்பட்டோர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். 5 இலட்சத்திற்கும் குறைவானவர்களே இதில் குணமடைந்து வீடு சென்றுள்ளார்கள். குணமடைந்து வீடு சென்றவர்களுக்கு மீண்டும் தொற்று உண்டாகலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் ஒருசில முடிவுகள் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பதற்கான வழிகளாக அமைந்த போதும் இந்த நாட்டில் சர்வதிகார ஆட்சி ஒன்றினையே கோட்டபாய ராஜபக்ச அவர்கள் நடத்தி வருவதாக கூறப்படுகிறது. ஆனால் இராணுவம் பொலிஸ் இவர்களைக் கொண்டே ஒரு கட்டுப்பாடான நிலைமையை இந்த நாட்டில் உருவாக்க முடியும். இல்லையேல் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே பொலிஸ், இராணுவத்தை பயன்படுத்துவது தவறில்லை. இலங்கையின் கடற்படை என்பது மிக முக்கியமானதொன்று. இந்த கடற்படையினருக்கே இத் தொற்று உருவாகியுள்ளது என்பது சந்தேகத்தை மேலும் வெளிப்படுத்துகிறது.

ஏற்கனவே அமெரிக்காவில் கடற்கப்பல் ஒன்றில் பணிபுரிந்த 4800 பேரும் கொரோனா தொற்றுக்குள்ளாகி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பது அறிந்த விடயமே. தற்பொழுது சீன நாட்டின் உதவிக்கு கையேந்தும் அளவிற்கு இலங்கை பொருளாதார ரீதியிலும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால் சீனாவிலிருந்து உருவாக்கப்பட்டதே இந்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு முக்கிய காரணமாக அமையப்பெற்றுள்ளது. மீண்டும் சீனாவோடு கைகோர்ப்பதை இலங்கை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்கும் பொழுதே பெரும் ஆபத்திலிருந்து தப்பித்து கொள்ளலாம். சமூக வன்முறைகள் ஏராளமாக ஆரம்பித்துக்கொண்டே செல்கின்றன, வறுமைகள் ஒரு பக்கம் ஊசலாடுகின்றன, தற்கொலைகள் இடம்பெறுகின்றன, மன, உள ரீதியாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வை உருவாக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதாக இருந்தால் அவர் மக்கள் மத்தியில் மனிதாபிமானம் உள்ள ஒரு தலைவராக பார்க்க முடியும். தமது சுயநல அரசியலுக்காக மட்டும் ஒரு சில விடயங்களை பயன்படுத்திவிட்டு பின்னர் மக்கள் மத்தியில் வந்து நான் சர்வதிகாரியா என மக்களிடம் கேள்வி கேட்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. ஒரு தலைவன் என்றால் அந்த நாட்டு மக்களை சீராக கொண்டு செல்வதுடன் அந்த மக்களுக்கு வருகின்ற நன்மை மற்றும் தீமைகளிலும் பங்கெடுக்க வேண்டும், அவனே ஒரு சிறந்த தலைவன்.

கதைகளுக்காக ஆசைப்பட்டு மக்களின் உயிர்களை ஒரு பொருட்டாக எண்ணாது தமது செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு செல்லும் போது குறிப்பாக இப்படிப்பட்டவர்களை ஒரு சிறந்த தலைவர் என்று எவறும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மிக விரைவாக இலங்கையின் நாளாப்புறமும் தொற்றுக்குள்ளானவர்களை பரிசோதிக்கும் பரிசோதனைக் கூடங்களை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்குவதன் ஊடாகவே கொரோனா வைரஸின் தாக்கங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். இதற்காக பொது அமைப்பினுடைய உதவிகளையும் பெற்றுசெயற்படுகின்ற பொழுது குறித்த ஓரிரு மாதங்களுக்குள் கொரோனா வைரஸைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். தற்பொழுது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் நிலை, ஒன்று வைரஸை கட்டுப்படுத்த வேண்டும். அல்லது பாராளுமன்றத்தை கூட்டி அதில் சில முடிவுகளை எடுத்து மக்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் தேர்தல் வைப்பதென்பது சாத்தியமற்றதொன்று. கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஒரு அறைக்குள் இருந்து சிந்திக்கின்றாரோ இல்லையோ இந்த வாரத்திற்குள் முடிவுகள் சரியாக எட்டப்பட வேண்டும். இல்லையேல் அவர் எதிர்பார்த்த ஜனாதிபதி கனவும் தவிடுபொடியாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**நெற்றிப்பொறியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவின் தாக்கமும் இலங்கைத்தீவும்

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்றின் வேகம் அதிகரித்துக் கொண்டே செல்லும் எனலாம். இருப்பினும் குறித்த நாடுகள் தமது நாடுகளை இத்தொற்றிலிருந்து காப்பாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் நிலையில் இலங்கையில் என்ன நடைபெறுகின்றது என்று ஒரு கனம் பார்க்கும் பொழுது குறித்த நாட்களில் பொதுத் தேர்தல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதன் அறிவிப்பு இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல் தலைமைகள் இந்த கொரோனா வைரஸை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதற்கு சாதகமாக அமைந்துள்ளது எனலாம்.

எரியும் வீட்டுக்குள் எண்ணெய் ஊற்றுவது போல், சுண்டெலிக்கு வேதனை பூனைக்கு கொண்டாட்டம், என்ற புழமொழிகளுக்கமைய இன்றைய அரசியல் தலைமைகளின் நிலைகள் முன்னோக்கி நகர்த்தப்படுகின்றது. ஆனாலும் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல்வாதிகள் இந்த தருணத்தில் உதவி செய்கிறார்களா? அல்லது நிவாரணப்பொருட்கள் வழுங்குகின்றார்களா? தமது சொந்த செலவில் என்ன செய்கின்றார்கள் என்றெல்லாம் மக்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். விரும்பியோ விரும்பாமலோ குறித்த அரசியல்வாதிகள் மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்றார்கள். அதுவும் தேர்தல் காலமாகி இருப்பதால் மக்களின் வாக்குகள் அவர்களுக்கு தேவைப்படுகிறது. ஏதோ ஒரு வகையில் அவர்கள் நிவாரணப் பொருட்கள் வழுங்கியே ஆக வேண்டும்.

அதில் பல குறைபாடுகள் இருந்தாலும் கூட நிலைமை இவ்வாறு மாதக்கணக்கில் தொடருமாக இருந்தால் அரசியல்வாதிகள் நிவாரணங்களை மக்களுக்கு வழுங்க முடியாது. ஆகவே ஒன்றில் பாராளுமன்றத்தை கூட்டி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் கௌரவம் பார்க்க முடியாது. பாராளுமன்றத்தை கூட்டி அதற்கான முடிவுகளை எடுக்காமல் போனால் கோட்டபாய ராஜபக்ச தோல்விகளை சந்திக்க நேரிடலாம். ஆகவே வெகு விரைவில் பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும், அல்லது தேர்தலை நடத்த வேண்டும், அல்லது கொரோனாவை உடன் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான ஒரு விடயமாகவே பாராளுமன்றத்தை மீள் கூட்டுவது சிறந்தது என்றே அரசியல்வாதிகள் பலரும் கூறினாலும் தனக்கு அதற்கான அதிகாரம் இல்லையென்றே கோட்டபாய கூறுகிறார். தொடர்ந்தும் ஊரடங்கு சட்டத்தை ஒரு மாதமளவில் அமுல்படுத்தி மக்களை தனிமைப்படுத்துவதனூடாக கொரோனாவின் வேகத்தை கட்டுப்படுத்த முடியும். வைத்தியசாலைகள், பாடசாலைகள், தொழில் பேட்டைகள், பொது இடங்கள் போன்றவற்றில் படிப்படியாக கொரோனா தொற்று இருப்பதை கண்டறிந்து இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்து அரச ஊழியர்களையும், தனியார் ஊழியர்களையும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தொற்றுள்ளவர்களை தனிமைப்படுத்துவதன் ஊடாக இத்தொற்றை குறித்த ஒரு மாத காலமளவில் 90 வீதம் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இதில் கட்சி பேதங்களை மறந்து இனவாதத்தை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவதனூடாக கொரோனா வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். இதனைவிடுத்து அரசியல்வாதிகளினுடைய பிற்போக்கு அரசியலானது இந்த நாட்டையும் மக்களையும் அதாளபாதாளத்திற்குள் கொண்டு செல்லும் ஒரு நடவடிக்கையாகும். ஆகவே சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பதனை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**102**

கெரில்லாவிற்கான மிகவும் பொருத்தமான வயதாக இருபத்தைந்து - முப்பத்தைந்து வரையான வயதைக் கருதலாம். இப் பருவத்தில் மனிதன் கணிசமான அளவு முதிர்ச்சியடைந்தும் தெளிவடைந்தும் இருப்பான். தனது வீடு, குழந்தைகள், தொழில் போன்றவற்றை விட்டுவிடத் தீர்மானித்து, தனது கடமையை பூரணமாக உணர்ந்து கொள்கின்றான். தனது முடிவிலிருந்து ஒரு அடி கூட விலகாமல், தனது கடமையைக் கடின உறுதியுடன் செய்கின்றான். இளையோர் சிலர் வீரர்களாக மாறி உயர் பதவிகளை எட்டிய தனியான சம்பவங்கள் சிலவும் எமது கிளர்ச்சி இராணுவத்தில் உண்டு. ஆனாலும், இது நிச்சயமாக வழமையான செயற்பாடல்ல. உயர் சமர்த்திறனை வெளிக்காட்டிய ஓர் இளையவனைப் போல, பத்துக் கணக்கில் இளையவர்கள் வந்தார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டியேற்பட்டது. ஏனெனில், நீண்டகாலமாக இவர்கள்கெரில்லாப்படைப்பிரிவின் ஆபத்தான அடிச்சுமையாக விளங்கினார்கள்.



நாங்கள் முன்னரே குறிப்பிட்டதைப்போல, கெரில்லா - ஒரு போர் வீரனே. ஆவன். நத்தையைப் போலத் தனது வீட்டைத்தானே சுமந்துசெல்வான். அவன் எப்பொழுதும் தனது முதுகுப் பையை பின்வரும் நிலையில் வைத்திருக்க வேண்டும். அதாவது அதிகூடிய பலனைத் தரக்கூடிய, குறைந்தளவிலான இன்றியமையாத பொருட்கள் இருக்கும் நிலையில் வைத்திருக்கலாகும். அவன் தன்னுடன் மிக இன்றியமையாதவற்றை மாத்திரமே வைத்திருப்பான். மிகமோசமான சம்பவங்கள் தவிர்த்து, எத்துன்பம் வந்தாலும் அதனை அவன் பேணிக்காப்பான். கெரில்லாவின் ஆயுதம் மிகவும் பாரமானதாக இருக்கக்கூடாது. மிகக் கடினமான பிரச்சனையாக சகல வகைச் சேமிப்புக்களை நிரப்புதல், குறிப்பாக ரவைகளைப் பெறுதலே விளங்குகின்றது. ரவைகள் கெட்டுப்போகாமல், அவை ,ழக்கப்படாமல் கெரில்லா பார்த்துக் கொள்ளவேண்டும். இவற்றில் சரியான கணக்கை அவன் மேற்கொள்வான். ரவைகளைக் கவனமாக அணுகுதல் என்பது கெரில்லா விதிகளில் ஒன்றாகும். இவ்வாறு தான் சுரிசுடுகலன்களுக்குமாகும். இதனை எப்பொழுதும் சுத்தமாகவும் நன்றாக எண்ணெய் பூசித் துப்பரவாக்கி வைத்திருப்பதுடன், சுடுகுழலை மினுமினுப்பாகவும் வைத்திருக்க வேண்டும். குழுக்களின் கட்டளையாளர்கள் தமது ஆயுதத்தைச் சுத்தமாக வைத்திருக்காத, கவனமில்லாத கெரில்லா மீது தண்டனை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மனவுறுதியைக்கொண்டிருக்கின்ற, தமது கடமையை ஆழமாகப் புரிந்து கொண்ட ஆட்கள் சாத்தியமற்ற சூழ்நிலையில் செயற்படுவதற்கு உதவுகின்ற அவர்களுக்கே உரிய குறிக்கோளைச் சந்தேகமின்றிக் கொண்டிருக்க வேண்டும். கெரில்லாவின் குறிக்கோள் எளிதானது, சிக்கலற்றது, அத்துடன் புரிந்துகொள்ளக் கூடியது. அதாவது கெரில்லா, தனது குறிக்கோளுக்காகத்தனதுவாழ்வை அர்ப்பணிக்கத் தயங்கமாட்டான். கிட்டத்தட்ட ஒவ்வொரு குடியானவனதும் குறிக்கோள் - சொந்தமான நிலத்துண்டு, அதனைப் பயன்படுத்தும் சாத்தியம், சமூக நீதி போன்றனவாகும். தொழிலாளியைப் பொறுத்தவரையில், அவனது குறிக்கோள் - நல்லதொரு வேலை பெற்றுக்கொள்ளும் ஆவல், நியாயமான ஊதியப்பணம், தனது உரிமைகள் மதிக்கப்படுதலை எட்டுதல் போன்றனவாகும். மாணவர்களதும் அறிவாளர்களதும் குறக்கோள் கூடுதலாகப் பொதுவான பண்பைக் கொண்டதாகும். அவர்கள் கூடுதலாகக் குடிமக்கள் சுதந்திரத்தைக் காக்கும் போராட்டக் குறிக்கோளால் ஈர்க்கப்படுகின்றனர்.

அடுத்த விடயத்திற்குச் செல்வோம். அதாவது கெரில்லாவின் வாழ்க்கை எவ்வகையானது என்பதே அதுவாகும்.

அவன் எப்பொழுதும் நகர்ந்து கொண்டே இருப்பான். இதோ எடுத்துக்காட்டாக, மலைப்பாங்கான பிரதேசத்தில் செயற்படுகின்ற கெரில்லாவைப் பார்ப்போம். அவனது காலடியை எதிரி தொடர்ச்சியாகப் பின்தொடர்வான். இவ்வாறான சூழ்நிலையில் கெரில்லாப் படைப்பிரிவு தனது நிலையை மாற்றிக்கொள்வதற்காகப் பகலில் நகர்கின்றது. இதன் போது உணவருந்துவதற்காகக் கூட நகர்வை நிறுத்தமாட்டார்கள்.

இரவு நெருங்குகின்றது. நீர்மூலம் ஒன்றிற்கு அருகில் உள்ள ஏதாவதொரு காட்டிடைவெளியில், கெரில்லாப் படைப்பிரிவிற்கான ஒழுங்கு முறையில் கூடாரம் அடிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவும் சாப்பிடத் தொடங்குகின்றது. இருள் சூழ்ந்தவுடன், தீக்கணப்பு மூட்டப்படுகின்றது.

கெரில்லாக்கள் எப்பொழுது, என்ன கிடைக்கின்றதோ அதனையே உணவாகக் கொள்கின்றனர். சில வேளைகளில் கெரில்லா கூடுதலாகச் சாப்பிடுவான். ஆனால், இரண்டு மூன்று நாட்கள் வரை உணவெதனையும் காணவே மாட்டான். இருந்த போதும் இந் நிலையில் அவனது உடல்வலு எள்ளளவேனும் குறையமாட்டாது. கெரில்லாவின் வாழ்விடம் - திறந்த வான்பரப்பின் கீழாகும். அவன் காமாக்கைக் கட்டி, அதன் மேல் நீர்புகா நைலோன் துணித்துண்டைக் (விரிப்பைக்) கட்டிவிடுவான். காமாக்கின் கீழ் தனது பொருட்பை, சுரிசுடுகலன், ரவைகள் போன்றவற்றை அதாவது அவனது விலையுயர் பொருட்களை வைப்பான். சிலவேளைகளில், எதிரி திடீரென தாக்கும் சாத்தியத்தைக் கருத்திற்கொண்டு, அவன் தனது சப்பாத்தைக் கழற்றாமலேயே நித்திரை கொள்வான். கெரில்லாவைப்பொறுத்தவரையில் சப்பாத்துமிகமுக்கியமானதாகும். சப்பாத்தை அணிந்திருப்பது, இன்னல்களையும் பறி கொடுப்புக்களையும் சகித்துக்கொள்ள அவனுக்கு உதவுகின்றது.

முன்னரேயே திட்டமிடப்படாவிட்டால் மாத்திரம் மக்கள் வாழும் பிரதேசங்களை நெருங்காமலும் மக்களுடனான சந்திப்பைத் தவிர்த்தும் கெரில்லாக்கள் தமது வாழ்வையை ஒவ்வொருநாளும் நகர்த்துகின்றனர். பசி, தாகம், குளிர், வெப்பம் போன்றவற்றை அனுபவித்தவாறும் முக்கியமாக விவசாயப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். பின்னர் நீண்ட தூர நகர்வு நேரங்களின் போதே குளிக்கின்றனர். ஆகவே தான் கெரில்லாக்களால் தம்மைத் துப்பரவாக வைத்திருக்க முடிவதில்லை. (ஆனாலும், எல்லாவிடத்திலும் இது மனிதனிலேயே கூடியளவில் தங்கியிருக்கின்றது).

கடந்த சமர் காலங்களில் சாத்தியமற்ற சூழ்நிலைகளிலேயே நாங்கள் கூடியளவு நாட்களைக் கழிக்க வேண்டியிருந்தது. அதாவது, வெப்பச் சூரியனின் கீழ் கடற்கரைப் பகுதிகளிலும் காய்ந்த பாறைகளுக்கு மத்தியிலுமாகும்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# இத்தாலியை விடவும் இலங்கையில் மிக மோசமாக கொரோனா பரவும் அபாயம் -மாவை சேனாதிராஜா



கொரோனா தொற்று தொடர்பாக மக்கள் அவதியுறும் இந்த நிலையிலே யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தொடர்பை மேற்கொண்டுள்ளார்.

கேள்வி : நீங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலும் ஒரு தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களில் முக்கியஸ்தர் என்ற வகையிலும் மக்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டிய கடைமைகள் பல இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நிலைமை எவ்வாறு இருக்கிறது? நிவாரணங்கள் சம்பந்தமாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில் : மார்ச் மாதத்தில் இந்த கொரோனா வைரஸ் அதாவது கொவிட் - 19 என்ற இந்த தொற்று நோய் உலகம் முழுவதும் தற்பொழுது பரந்து தீவிரமாக அமெரிக்காவிலே 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் அண்மித்தளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற இடங்களில் பயங்கரமாக இந்த நிலைமை பெருகி கொண்டு இருக்கின்றன. இலங்கையிலும் அந்த சமகாலத்தில் கிட்டத்தட்ட டிசம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதத்திற்குமிடையிலும் இந்த வைரஸ் பற்றிய பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் மிக குறைந்த எண்ணிக்கையினர் தான் இந்த தொற்றுக்கு உள்ளாகியிருப்பார்கள் என்ற சந்தேகத்தில் அந்த நோயை பற்றி அந்த அடையாளங்கள் கிட்டத்தட்ட 14 நாட்கள் செல்லும் என்ற நிலைமையிலும் பலர் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் அவர்கள் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள், கண்காணிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் மிக அண்மைக்காலத்தில் சென்ற இரு வாரங்களிற்கு இடையில் இலங்கையிலும் பரவலாக பல இடங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்டால் கொழும்பு நகர் பிரதேசங்களில் மிகவும் முக்கியமான அலுவலகங்கள் இருக்கின்ற இடங்கள் அங்கு தற்பொழுது அறிந்த நிலைகளைப் பார்த்தால் பண்டாரநாயக்க மாவத்தை என்பது மிகப்பெரும்பாலும் தமிழ் மக்கள் அடர்ந்து வாழுகின்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன. மாடிக் கட்டடங்களில் இருக்கிறார்கள். அந்த இடத்தில் தற்பொழுது 1000 கணக்கானவர்கள் இந்த தொற்றுக்கு, கொரோனா வைரஸிற்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்று தற்பொழுது வட பகுதிகளை நோக்கி அவர்களை கேப்பாப்பிளவு, காங்கேசன்துறை, கொடிகாமம், வவுனியா போன்ற பிரதேசங்களில் எல்லாம் அவர்களை கொண்டு வந்து பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டு அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த விடயம் எங்களுக்கு ஒரு செய்தியாக செய்தியாளர்களிடமிருந்து கிடைத்ததே தவிர நான் உடனடியாக அரசாங்க அதிபரிடம் கேட்டேன், அதை விட மருத்துவர்களிடத்தில் கேட்டேன் அவர்கள் எவருக்கும் அந்த செய்தி தெரியாமல் இருந்தது. ஆனால் இராணுவத்தினர் தற்பொழுது அனைத்து நடவடிக்கைளிலும் அவர்களுக்குரிய தீர்மானங்களே நடவடிக்கைகளில் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையிலும் அதாவது இராணுவத் தளபதியாக இருப்பவர் மற்றும் குணத்திலக என்னும் உதவியாளரும் சவேந்திர டி சில்வாவும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கும் வந்தார்கள். அந்த காலத்தில் நாங்கள் அறிந்த வகையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து மருத்துவ பரிசோதனைகளிலும் பாதுகாப்பிலும் நோயை நிறுத்தி மற்றைய உயிர்களை பாதுகாப்பதிலும் தங்களை அர்ப்பணித்து சேவைகளை செய்யும் சத்தியமூர்த்தி மற்றும் கேதீஸ்வரனும் அவ்வாறாக நிபுணத்துவம் வாய்ந்த பலர் அதாவது ஊரடங்கு சட்டத்தை தற்பொழுது எடுக்க வேண்டாம் இன்னும் சில வாரங்களுக்கு, ஒருமாதம் அல்லது ஒருவாரத்திற்காவது நீங்கள் தாமதிக்க வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் தான் மக்களை பாதுகாக்கலாம் என்றும் கேட்டதற்கு பின்னரும் அதற்கு மறுநாள் திங்கட் கிழமையே ஊரடங்கு சட்டத்தை தளர்த்தியிருந்தார்கள். அந்த நாளே பெரியளவில் மருத்துவமனைகளுக்கு செல்பவர்களை விட சந்தைப் பிரதேசங்களிலும் அதைவிட எனக்கு துக்கமான செய்தி இந்த குடிவகைகளை விற்கின்ற இடங்களில் இளம் சமூகம் கூட மிகப் பெரியளவில் கூடியிருந்தார்கள் என்றும் அவர்கள் தெருக்களிலும் கூட தள்ளாடியிருந்தார்கள் என்ற ஒரு செய்தியையும் சொல்லியிருக்கின்றார்கள். அது இந்த கொரோனா வைரஸ் துக்கம், ஊரடங்கு சட்டம், பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருக்கும் நேரம், பசி பட்டினி வரப்போகின்றது, வந்துவிட்டது என்று மக்கள் துடித்துக்கொண்டு கண்ணீரும் கம்பளியுமாக இருக்கும் நேரத்தில் அந்த செய்தி எங்களுக்கு மிகவும் மனவருத்தமாகவும் இருந்தது.

அவ்வாறான இந்த நிலைமைகளை ஒரு மருத்துவ உயர் பீடத்தில் இருந்து கொண்டு இந்த பணியில் ஆர்வம் கொண்டு தங்களை அர்ப்பணித்து செய்யும் மருத்துவ சமூகத்தினுடைய கோரிக்கைகள். திடீரென அதாவது ஊரடங்கு சட்டத்தை தளர்த்தியதில் இருந்து யாழ்ப்பாணத்தை பொருத்தவரையிலும் மேலும் பல இடங்களில் கொழும்பு பிரதேசத்திலும் கூட சந்தைப் பிரதேசமாக இருக்கட்டும் இன்று மிகமோசமாக கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்துள்ளது. இன்று கடந்திருக்கும் இரண்டு வாரங்களிற்குள்ளேயே மிக அதிகமான இராணுவத்தினர் கூட குறிப்பாக கடற்படையினர் அல்லது ஒரு உயர்ந்த பீடமாக இருக்கும் சட்டஅதிபர் திணைக்களத்திலே அந்த நோய் பரவி இன்று சட்டமா அதிபர் திணைக்களமே மூடப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் கூட தங்களை அர்ப்பணித்து நோயை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாப்பதற்காக உழைக்கிறார்கள் என்றிருந்தாலும் அவர்களுக்கே அபாயம் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்கம் துறையிலே ஆர்வம் கொண்டவர்கள், நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், மருத்துவர்கள் கூறுகின்ற கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்காமல் ஏதோ தேர்தல் ஒன்றை நடத்துவதற்காக தேர்ச்சியான சூழல் வந்துவிட்டது என்பதை காட்டுவதற்காக ஜனாதிபதியும் அவருடைய அமைச்சர்களும் நடவடிக்கைகளை எடுத்து காண்பிப்பதன் மூலம் தற்பொழுது வருந்துகின்றார்கள் இத்தாலியை நோக்கி இலங்கை செல்லுகின்றது கொரோனா வைரஸிற்கு மக்கள் இன்று பலியாகப் போகின்றார்கள் என்ற வர்ணனைகள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. கொடூரமான சூழல் நாட்டிலே ஏற்பட்டிருப்பதை நாங்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவதாக இந்த விடயத்தில் நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் மருத்துவ துறையிலே நிபுணத்துவமாக இருப்பவர்கள் அல்லது கற்றல் ஆற்றல் அனுபவமுள்ளவர்கள் கூறுகின்ற கருத்துக்களை தேர்தல் வெற்றிகளுக்காக என்று இல்லாமல் அவர்கள் அனைத்து கட்சி தலைவர்கள் மற்றும் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள் போன்றவர்களை கூட்டி கொரோனா வைரஸை எவ்வாறு தடுக்கலாம் என்ற வழி வகைகளை காணவேண்டும்.

அடுத்ததாக அரசியலமைப்பு இன்று தேர்தல் ஆணையகத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலே பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைப்பதிலிருந்து அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலும் சட்டபூர்வமான அரசியலமைப்பு ரீதியிலான அதனுடைய முறைகள். இவைகள் இன்று மீறி ஜனாதிபதி தான் நினைத்த மாதிரி ஒரு சர்வாதிகார எண்ணத்துடன் தான் நினைத்தவாறே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். உண்மையில் தேர்தல் அறிவித்ததில் இருந்து அதாவது யூன் மாதம் 2 ஆம் திகதிக்கு இடையில் பாராளுமன்றம் கூடும் என்று அறிவித்தால் அரசியலமைப்பு செயலிழந்துவிடும். ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை அவர் பயன்படுத்துவதற்கு அடிப்படை ஆதாரங்கள் இல்லாமல் போய்விடும். 2 ஆம் திகதிக்கு பின்னர் பாராளுமன்றம் இல்லாமல் போய்விடப்போகிறது. இன்று தேர்தல் ஆணையகம் யூன் மாதம் 20 ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என்று அறிவித்ததே அதற்குள் இன்று கொரோனா வைரஸ் தொற்று எவ்வளவு தூரம் தீவிரமடைந்து பரவப் போகின்றது என்றவொரு அச்சத்தை மருத்துவ நிபுணர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சுகாதார நிறுவனம் உலக சுகாதார அமைப்புக்கள் எல்லாம் வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் மிக புத்திசாளித்தனமாக ஆளுகின்ற தரப்பை சேர்ந்தவர்கள் ஜனாதிபதியாக இருப்பவர் முக்கியத்துவம் வாய்ந்த அனுபவம் வாய்ந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முக்கிய தலைவர்கள் அனைவரையும் அழைத்து ஒன்றாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசியல் நெருக்கடியில்லாமல் இணக்கத்தின் அடிப்படையில் இன்று இருக்கின்ற நீதிமன்றத்திற்கு போய் பாராளுமன்றத்தை கூட்டுவது எப்படி அல்லது இந்த கொரோனா வைரஸை தீர்க்கின்ற வரையிலும் அரசியல் சட்ட நிபுணத்துவ வழிகள் மற்றும் நிதியை கையாளுகின்ற முறைகள் நிதி பற்றாக்குறைகள் இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு முன்பு இருந்த பாராளுமன்றத்தினையே செப்டம்பர் 2 ஆம் திகதி வரைக்கும் அந்த பாராளுமன்றத்திற்கு வருகை தந்து அந்த பாராளுமன்றத்தையாவது தூக்கி தீர்மானங்களை ஒரு இணக்கத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டும். இவ்வாறு உச்ச நீதிமன்றத்திற்கு சென்று இந்த சட்ட நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒரு வழிகாட்டலைப்பெற வேண்டுமென்று சொன்னால் ஜனாதிபதி அதனை மறுத்து வருகின்றார்.

இதையெல்லாம் விடுத்துவிட்டு கொரோனா வைரஸ் மனிதகுலத்தை அழித்துவிடுகின்ற நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதியும் அரசும் அதைவிட எதிர் தரப்பில் இருக்கும் தலைவர்களும் ஒன்று கூடி ஒரு இணக்கத்தின் அடிப்படையில் அரசியலமைப்பு நெருக்கடிகளுக்கும் தீர்வு காண வேண்டும். பாராளுமன்ற தேர்தலை எப்படி நடத்த வேண்டுமோ அதை மருத்துவ அடிப்படையில், ஆய்வுகள் அடிப்படையில், நிபுணத்துவத்தின் அடிப்படையில் தீர்மானித்து ஒரு சுமூகமான நிலையில் ஏற்படுத்த வேண்டும். நேற்று மாலையும் கூட இந்த பாடசாலைகளை மே 11 ஆம் திகதி திறக்கப்போகின்றோம், பல்கலைக்கழகத்தை திறக்கப்போகின்றோம் என அறிவித்தல் வந்தது அதைவிட ஓகஸ்ட் மாதத்திலே உயர்தர மாணவர்களுக்குரிய பரீட்சைகள் அதைவிட புலமைபரிசில் பரீட்சைகள் இடம்பெறுவது பற்றி அறிவித்திருந்தார்கள். உயர் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமான் அவர்களுக்கு நான் அனுப்பிய செய்தியின்படி என்னுடன் அவர் ஒருசில நிமிடங்கள் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்ட பொழுது என்னுடைய பிரதேசத்தின் பிரச்சனைகளை நான் விளங்கப்படுத்தினேன். தற்பொழுது அவசரப்பட்டு பாடசாலைகளை திறக்காதீர்கள். பரீட்சைகளை நடத்தாதீர்கள் என நான் அவருக்கு விளக்கமாக கூறினேன். அவரும் அதை இணக்கமாக ஏற்றுக்கொண்டு என்னுடன் பேசினார்.

அடுத்ததாக நான் கொடுத்த செய்தியின் அடிப்படையில் கல்வி அமைச்சர் அழகப்பெருமான் மிகவும் ஆர்வமாக இருக்கும் பிரச்சனைகள் பற்றி என்னுடன் கலந்து பேசினார். கல்வித்துறையில் நீங்கள் பாடசாலைகள் பல்கலைக்கழகங்களை திறப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானம் அது உங்களுடைய அமைச்சை சார்ந்த தீர்மானத்தை நீங்கள் ஒத்திவைக்க வேண்டும், மாணவர்கள் மிகமோசமாக மனரீதியாக பாதிக்கப்பட்டிருப்பார்கள். நாங்களே முழு நாட்களிலும் கொரோனா பற்றி உலகத்திலே சொல்லப்படுகின்ற செய்திகள் எவ்வளவு தூரம் உலகத்தில் மிகமோசமாக இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள் தீவிரமாக பரவப்பட்டு வரும் நோயைப் பற்றி கேட்கும் சந்தர்ப்பங்களில் நாங்களே ஒரு மன உழைச்சலுக்குள் இருக்கின்றோம். ஆகவே மாணவர்கள் இந்த விடயத்தினை எல்லாம் மிக ஆர்வமாக பார்ப்பார்கள் அவர்களது தேர்ச்சியிலே படிக்கும் மன நிலைகளிலே அவர்கள் இருக்கின்றார்களா என பரிசோதிக்கப்பட வேண்டும்.

தொடரும்...

இரணியன்

# கொரோனா நிவாரணத்தை வைத்து அரசியல் செய்யும் கோட்டா : கொக்கரிக்கும் கூட்டமைப்பு

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸால் இப்பத்தி எழுதும் வரை ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் பேர் உயிரிழந்தும் சுமார் 28 இலட்சத்துக்கும் மேல் நோய் தொற்றுக்குள்ளான நிலையில் இலங்கையில் தற்பொழுது வரை 467 பேர் நோய் தொற்றுக்குள்ளான நிலையில் 7 பேர் மரணித்துள்ளனர்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைவான உயிரிழப்புக்களை சந்தித்த நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. சுகாதாரத் துறையிலும் பொருளாதார நிலையிலும் மிகவும் முன்னேற்றகரமான நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகள் உயிரிழப்புக்களை அதிகமாக சந்தித்து வரும் நிலையில் அத்துடன் அவ் நாடுகளில் நோய் தொற்றின் தாக்கம் அதிகரித்து காணப்படும். இந்நிலையில் பொருளாதார ரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இலங்கை மிக வேகமாக நோய் தாக்கத்தை குறைத்துக் கொண்டதுடன் உயிரிழப்புக்களையும் குறைத்துக் கொண்டமை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

இதற்கு மிக முக்கிய காரணம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் தான். ஊரடங்கை நாடு முழுவதும் அமுல்படுத்தி சகல விமானப் போக்குவரத்துக்களையும் நிறுத்தி அத்துடன் மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவத்தையும் நிறுத்தியமை அத்துடன் கொரோனாத் தொற்றை முறியடிக்க முப்படையினரையும் களமிறக்கியமை, சுகாதாரப் பிரிவினரை முடக்கிவிட்டமை, நோய் தொற்று அறிகுறி சம்பந்தமானவர்களை தனிமைப்படுத்தல் முகாம்களை உருவாக்கி அதற்கு முப்படையினரை ஈடுபடுத்தியமை போன்ற பல செயற்பாடுகள் காரணமாக நோயின் தாக்கம் இன்றளவும் உலகளவில் இலங்கை மிகவும் பாதுகாப்பான நிலையில் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு பக்கம் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தும் நிலையில் மறுபக்கம் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றது. இதற்கு பல திட்டங்களையும் பல சலுகைகளையும் அறிவித்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிவாரணங்கள் என்ற அடிப்படையில் பார்த்தால் அரச தனியார் வங்கிகளில் கடன் பெற்றவர்களின் மீள் செலுத்தல் நடவடிக்கைகள் ஆறுமாத காலம் பிற்போட அறிவித்தமை, சகல வாகன லீசிங் கடன்களையும் 6 மாத காலம் பிற்போடப்பட்டமை, மின்சாரக்கட்டணம் தொலைத்தொடர்பு கட்டணங்கள் அறவிடும் காலத்தை பிற்போட்டமை போன்ற செயற்திட்டங்களுடன் சமூர்த்தி பயனாளிகளுக்கு ரூபாய் 5000 கொடுப்பனவை வழங்கியமை சமூர்த்தி அற்றவர்கள் கூலி வேலை செய்பவர்கள் முச்சக்கரவண்டி சாரதிகள் தனியார் பேரூந்து போக்குவரத்து சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஊடகவியலாளர்கள் என அனைவருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவை வழங்கும்படி கிராம சேவையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டமை சில அத்தியாவசிய பொருட்களுக்கு விலைக்குறைப்பை உடனடியாக மேற்கொண்டமை (பருப்பு65ரூபாய், மீன்ரின் 100 ரூபாய்). அத்துடன் மலையக மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியமை கொரோனா தொற்று அதிகம் பாதித்த மாவட்டங்களான களுத்துறை, கொழும்பு, புத்தளம், அம்பாறை, யாழ்ப்பாணம், கண்டி போன்ற மாவட்ட மக்களுக்கு உடனடியாக 5000 ரூபாய் கொடுப்பனவுகளை வழங்கியமை என பல நிவாரண செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது கோட்டபாய அரசு. இந்நிலையில் நோயின் தாக்கம் குறைய முன்னர் சுகாதார நோய் தொற்று நீக்கல் பகுதியினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை கொடுத்தும் செவி கொடுக்காமல் ஊரடங்கு சட்டத்தை தளர்த்தி சகல நிர்வாக கட்டமைப்புகளையும் படிப்படியாக இயக்க அரசு தயாராகி வருகின்றது.

தொற்று நோய்த் தடுப்பு பிரிவு இன்றும் இரு வாரங்கள் ஊரடங்கை தளர்த்தாமல் நிலைமையை அவதானித்து ஊரடங்கை தளர்த்தலாம் என யோசணை முன்வைக்கப்பட்ட பொழுதும் அதனை கேட்காமல் அரசு செயற்பட தொடங்கியமை அது வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலை வைப்பதற்கு ஏதுவாகவே ஊரடங்கை தளர்த்தியுள்ளது என சந்தேகமாக உள்ளதாக தெரிகின்றது. கோட்டபாய கொரோனாவை முறியடித்து வெற்றியடைந்ததை காட்டியும் நிவாரணங்கள் சலுகைகளை காட்டியும் வர இருக்கும் தேர்தலில் 2/3 பெற்றுவிடலாம் என கணக்கு போடுகின்றார்கள். காலம் காலமாக இலங்கையில் ஆட்சி புரியும் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற சில தில்லாலங்கடி வேலைகளை செய்ததை இப்பொழுது திரும்பி பார்ப்பது சாலச்சிறந்தது.

1994 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கினார். 1978 இன் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை விரட்ட முடியவில்லை. இலங்கை சுதந்திரக் கட்சிக்கு 1978 நிறைவேற்று அதிகார முறையை கொண்டு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா அன்றிலிருந்து 1994 ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி பீடத்தில் இருந்து சுதந்திரக் கட்சியால் அகற்ற முடியவில்லை. இந் நேரத்தில் தான் சந்திரிக்கா அவர்கள் தேர்தலில் சுதந்திரக்கட்சி ஓர் அனுதாப வாக்கு கிடைக்கும் என பலரும் எதிர்பார்த்து இருந்தனர். அதற்கு காரணம் 1993 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச குண்டு வெடிப்பில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி படுகொலை செய்யப்படுகின்றார். ரணசிங்க பிரேமதாச தமிழ் மக்களுக்கு விரோதியாக காணப்பட்டார். பாமர சிங்கள மக்களின் பெரும் தலைவனாக வலம் வந்தவர் ஆகவே அவர் கொல்லப்பட்ட பொழுது 1994 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அனுதாப வாக்குகளால் வெல்லும் நிலையில் இருந்தது. இந்நிலையில் சுதந்திரக்கட்சி சார்பில் சந்திரிக்கா களம் இறங்கினார். சந்திரிக்காவின் கணவரான பிரபல நடிகரும் சுதந்திரக்கட்சியின் உறுப்பினருமான குமாரதுங்க யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் பரீட்சையமானவர் அக்காலகட்டத்தில் விடுதலை புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு அவர்களுடன் பேச்சு வார்த்தைக்கு பிரச்சனை அதிகமான காலமாக 1986 ஆம் ஆண்டு யாழ் வந்து மக்களை சந்தித்து சிநேகபூர்வமாக செயற்பட்ட ஒருவர் அவரிடம் பேச்சுவார்த்தை முயற்சியில் கைதிகள் பரிமாற்றமும் இடம் பெற்றது. பின்னாளில் கொழும்பில் வைத்து தீவிர சிங்கள இடதுசாரிகளால் குமாரதுங்க அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆகவே அந்த நிலையை பயன்படுத்தி வெள்ளைச் சாரியுடன் சந்திரிக்கா அம்மையார் ஒரு வெள்ளை சமாதானப் புறாவாக வேசமிட்டு யாழ்ப்பாண மக்களின்



வாக்குகளை பெற்று வெற்றியீட்டியதுடன் 5 இலட்சம் மக்களையும் யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டியடித்தது மட்டுமல்லாமல் செம்மணிப் படுகொலைகளும் இவர் காலத்தில் இடம்பெற்றது. வெள்ளைப் புறாவாக இவர் வேடமிட்டதை அப்பொழுது யாழ்ப்பாண மக்கள் புரிந்து கொள்ளவில்லை தம்மை காக்க வந்த தேவதையாகவே அவரை கருதினார்கள். இக்காலகட்டத்தில் சில பொருட்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனையானது. சுந்திரிக்கா குடை சந்திரிக்கா பை என பல பொருட்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டன. ஒப்பந்தங்களும் இடம்பெற்று பலகாலம் மூடப்பட்ட A9 வீதியும் திறக்கப்பட்டது. அதே போல் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச அவர்களும் இலங்கையில் ஆட்சி புரிந்த ஜனாதிபதிகளில் தமிழ் பேசக் கூடியவராக தன்னை தெரியப்படுத்தி சில சலுகைகளை வழங்கி ஜனாதிபதியாகி நாட்டில் 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக கூறி இலட்சக்கணக்கான மக்களை கொன்று பல மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். யுத்தம் மௌணிக்கப்பட்டதன் பின்னர் வடபகுதியில் துரித அபிவிருத்தி பணி இவர் காலத்தில் இடம் பெற்றது. A9 வீதி கார்பேட் வீதியாக போடப்பட்டதுடன்.

தடைப்பட்டிருந்த கொழும்பு - காங்கேசன்துறை புகையிரதப் பாதை போடப்பட்டு புகையிரதம் யாழ்ப்பாணம் வந்தது இவரது காலத்தில் தான். அத்துடன் சரணடைந்த 10,000க்கும் மேற்பட்ட போராளிகளை புனர்வாழ்வு அழித்து விடுதலை செய்தமை சகல வீதித் தடைகளை எடுத்து சுதந்திரமாக கொழும்பு சென்றுவர வழி சமைத்தமை போன்ற விடயங்களை காட்டி 2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கேட்டு நின்றார். ஆனால் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்து மகிந்த ராஜபக்சவை நிராகரித்தனர். 2015 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மைத்திரி, ரணில் கூட்டு நல்லாட்சி என்று சொல்லி களமிறங்கினர். அவர்களது மிகத் தத்துரூவமான வேடங்களும் அத்துடன் மகிந்த ராஜபக்ச மீது தமிழ் மக்களின் கோபமும் அதனை சரியாக பயன்படுத்தி மைத்திரி - ரணில் கூட்டு நல்லாட்சி உதயமானது.

தமிழ் மக்களின் தற்போதைய ஏகபிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் கூட்டமைப்பும் அந்தநல்லாட்சிக்குமுட்டுக் கொடுத்து மகிந்த காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை கூட இடம்பெறவில்லை. தமிழ் மக்களை மிகவும் முட்டாளாக்கி சென்றது இந்த நல்லாட்சி அரசாங்கமும் அதன் பின்னர் 1919 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச அவர்களின் சகோதரன் கோட்டபாயவும் ஐக்கிய தேசியக் கட்சியில் சஜித் பிரேமதாசவும் போட்டியிட்டனர். இதில் நல்லாட்சி அரசியல் வீடமைப்பு அமைக்க சஜித் இருந்தபொழுது வடகிழக்கு பகுதிகளில் பல வீட்டுத்திட்டங்களை உருவாக்கி முடித்துள்ளார். இதனை பயன்படுத்தி தேர்தலில் பிரச்சாரங்கள் இடம்பெற்றது.

தமிழ் மக்கள் எப்பொழுதும் தமக்கு செய்யும் உதவிகளை மறக்காதவர்கள் போல் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தனர். கோட்டபாயவுக்கு வடகிழக்கு பகுதிகளில் சொற்ப வாக்குகளே கிடைத்தன எனினும் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை பெற்று கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வெற்றிபெற்றார். இப்பொழுது வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் 2/3 பெரும்பான்மையை பெற்றுவிட வேண்டும் என்பதில் அவர் குறியாக உள்ளார். அதற்கு அவர் கொரோனா வைரஸை தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகின்றார் போல் தெரிகின்றது.

வடகிழக்கு மக்களுக்கு அரிசி, பருப்பு போன்ற நிவாரணங்களையும் 5000 ரூபாய் கொடுப்பனவுகளையும் காட்டிதேர்தலில் வெல்லலாம் என கங்கனம் கட்டி நிற்பது தெரிகின்றது. ஜனாதிபதி தேர்தலை விட பாராளுமன்ற தேர்தலில் 2/3 பெரும்பான்மை பெற தமிழ் மக்களின் வாக்குகள் மிக அவசியமானது. இதனை கருத்தில் கொண்டு அவர் காய் நகர்த்தலில் தற்பொழுது ஈடுபட்டுள்ளார். இது எவ்வளவு தூரம் சாத்தியமானது என தற்பொழுது தெரியாது. ஏனெனில் தமிழ் மக்கள் அற்ப சலுகைகளுக்கும் நிவாரணங்களுக்கும் அடிபணிந்து போனவர்கள் அல்ல. ஜனாதிபதி கோட்டபாய ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் முன்பு இருந்த தலைவர்கள் விட்ட பிழையை விடாமல் பலகாலமாக சிறைச்சாலைகளில் இருக்கும் அரசியல் கைதிகளில் சிலரையாவது விடுதலை செய்தல், இராணுவப் பிரசன்னத்தை குறைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஓர் சரியான தீர்வை தரமுயற்சித்தல், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். தனித்தே சலுகைகள், நிவாரணங்கள், அபிவிருத்திகள், வேலைவாய்ப்புக்கள் என்பவற்றை காட்டி வாக்குகளை பெற்று வெற்றிபெறலாம் என கனவு காணக் கூடாது. கொரோனா தொற்றிலிருந்து எவ்வாறு மக்களை காக்க வேண்டும் என்று பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பொழுதிலும் மிகத் துணிச்சலாக செயல்படுவதைப் போன்று தமிழ் மக்களின் அபிலாசைகளையும் துணிந்து சில அதிரடி முடிவுகளை எடுப்பாராயின் வடகிழக்கு தமிழ் மக்களின் அசைக்கமுடியாத தலைவனாக வலம் வர முடியும். அதைவிட்டு பெரும்பான்மை இன சித்தாந்தத்துடன் செயற்படுவாராயின் தமிழ் மக்கள் வரும் தேர்தலிலும் கோட்டபாய ராஜபக்ச அவர்களை நிராகரிப்பார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

தாயகத்தான்

# ஆபாசத்தில் பலரையும் மிரட்டி ஆட்டையை போடும் சமூக வலையத்தளங்களை கண்டுப்பிடிப்பது எப்படி? – சட்டத்தரணி

ஆபாசத்தில் பலரையும் மிரட்டி ஆட்டையைப்போடும் சமூக வலைத்தளங்களை கண்டு பிடிப்பது எப்படி? - சட்டத்தரணி நந்திகா அப்பஸ்பகௌதி

சைபர் கிரைம் சம்பந்தமான ஒரு விடயத்தை பற்றி பார்ப்போமானால் சைபர் கிரைம் என்று சொல்லும் பொழுது கொம்பியூட்டர் கிரைம், ஈ கிரைம்ஸ் என்றெல்லாம் கூறுவார்கள். இது கொம்பியூட்டர் சம்பந்தமான கிரைம் மட்டுமல்ல அதாவது கொம்பியூட்டர் சிஸ்டமேட்டிங்கான பாவனை வந்து அனைத்து துறையிலுமே இருக்கிறது. ஒரு டிரான்ஸ்போடேசனாக இருக்கட்டும் இல்லையேல் கார் என்ஜின்ல இருந்து பிலேன் எவிகேசன் இருந்து இல்லாவிடின் டிரான்ஸ் செக்சனில் ஒன்லைன் பேர்ஜேர்ஸ், கிரடிட் கார்ட் ஆக இருந்தால் இல்லாவிடின் உங்களின் மொபைல் மற்றும் ஜி மெயில் மீடியாஸ் போன் கோல்ஸ் போன்ற அனைத்துமே கணிணி என்ற பொருளுக்குள் தான் வருகின்றது.

ஆகவே கொம்பியூட்டர்ஸ் கிரைம்ஸ் பற்றி பார்த்தால் அதுவொரு பெரிய ஏரியா. அது எல்லாவற்றையும் பற்றி தற்பொழுது முழுமையாக கதைக்க முடியாது ஆகவே இன்று நான் பேசவிருப்பது சோசல் மீடியாவில் ரிலேட்டிவான இன்ஸ்டகிராம் வட்ஸ்அப் அவற்றை ஹெக் பன்னி வரக்கூடிய பிரச்சனைகள் பற்றி தான் பார்க்கப்போகின்றோம். அந்த வகையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையை பார்த்தால் முகப் புத்தகம் பற்றிய ஒரு பிரச்சனை. அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பிரச்சனை அது இன்னும் நீதிமன்றில் வழக்கு நடந்த வண்ணம் உள்ளது. அதன் தீர்ப்பு இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

ஆகவே இந்த சைபர் கிரைம் பிரச்சனையினுடைய தீர்ப்பை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் அது இன்னும் வராத நிலையில் அதற்கு முன்னர் தீர்ப்பு வரும் வரை காத்திருந்து உங்களுக்கு பதிலளிக்காமல் இந்த பிரச்சனையில் இருந்து நாங்கள் கற்றுக்கொள்ளக் கூடிய விடயங்கள் என்ன? எவ்வாறான பிரச்சனைகள் ஏற்படாமல் அவற்றை எவ்வாறு தடுப்பது போன்ற சோசல் மீடியாவின் ரிலேட்டிவான உங்களுடைய முகப் புத்தகத்தை ஹெக் பண்ணினாலோ அல்லது தேவையற்ற ஒளிப்பதிவுகளை உங்களின் முகப்புத்தகங்களில் பதிவேற்றினாலோ அல்லது உங்களின் புகைப்படங்களை வேற மாதிரியேதும் செய்து உங்களை அவமானப்படுத்தினாலோ இந்த மாதிரியான பிரச்சனைகள் உங்களுக்கு ஏற்பட்டால் உடனடியாக எங்கு செல்வது எவற்றை நாடுவது என்ன செய்ய வேண்டும் அதுதவிர இது தொடர்பான விடயங்கள் ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பன தொடர்பாக தான் நான் பேசப் போகின்ற விடயத்தின் முக்கிய நோக்கமாக காணப்படுகின்றது.

அந்த வகையில் ரன்னிங் பிளேன்ஸை ஹெக் பன்னி தரையிறக்கப்பட்டுள்ளன, ஒன்லைனில் ரிலீஸ் ஆகாத திரைப்படங்களை ஹெக் பண்ணி வெளியிட்டிருக்கிறார்கள், சிப்பினை கொண்டு கொன்றோல் செய்யக்கூடிய காரையே டிரைவர் இருக்கும் பொழுதே ஹெக் பண்ணி இருக்கிறார்கள். அந்தளவிற்கு ஹெக்கிங்ஸ் இருக்கும் பொழுது ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் அந்தளவிற்கு அப்படி பெரிய ஹெக்கிங்ஸ் இல்லாவிட்டாலும் இங்கு நாங்கள் டார்கெட் பண்ணுவது இன்டிவீடியோஸஸ், ஸ்பெஷலாக சோசல் மீடியாஸில் தான் நிறைய விக்டிமேஸ் ஆகின்றார்கள். அவ்வாறு இரண்டு வருடங்களுக்கு முன்னால் வந்த முறைப்பாடு பற்றி தான் கதைக்கவுள்ளேன். இந்த முறைப்பாடு சம்பந்தப்பட்ட என்னுடைய தரப்பினரின் அனுமதியுடன் தான் பேசுகின்றேன். அந்த வகையில் அந்த முறைப்பாட்டு வழக்குகள் இன்றும் நடந்து கொண்டிருப்பதால் அவர்கள் தற்போதைக்கு வீடியோவில் பேச வரவில்லை. ஆனால் இந்த வழக்கு வெற்றிபெறவிட்டு ஒளிப்பதிவு மூலம் பேசி அதை வெளியிடுவதற்கு கட்டாயமாக முன் வருவார்கள்.

ஒரு கணவன் மனைவி இருக்கிறார்கள் அவர்கள் தான் எனது தரப்பினர். கணவன் வெளிநாட்டில் இருக்கிறார், மனைவி இங்கு தான் இருக்கிறார் உங்களுக்கு தெரியும் மாட்ரிமோனி வாழ்க்கை தொடங்குவதற்கு முன்ஸ்கைப்பினூடானதொடர்புகளைதான் மேற்கொள்கின்றவர்கள் அனைவருக்கும் தெரியும் அவர்களுக்கு இடையே நிறைய தனிப்பட்ட மெசேஜ்கள் இருக்கும். தனிப்பட்ட புகைப்பட பரிமாற்றங்கள் இருக்கும். இதை அதாவது அதில் மனைவி கணவனுக்கு அனுப்புகின்ற புகைப்படங்களை ஒரு நபர் ஹெக் பண்ணுகின்றார். இவர்கள் இருவருக்குமே தெரியாமல் அந்த ஹெக்கர் அவர்களின் ஸ்கைப்பை தொடர்ச்சியாக அவதானிக்கின்றார், ஸ்கிரீன் சொட் எடுத்துக்கொள்ளுகின்றார், கணவன் மனைவி கதைக்கும் விடயங்கள் எல்லாவற்றையும் ரெக்கோடிங்கில் எடுத்துக்கொள்ளுகின்றார். அவ்வாறு ரெக்கோடிங்கை எடுத்ததன் பின் முகப்புத்தகத்தில் ஒரு பெண்ணின் புகைப்படத்தை அடையாளமாக போட்டு பிரண்ட்சிப் வேண்டுகோளை கொடுக்கின்றார். எந்தவித காரணமும் இன்றி ஒரு பெண்ணின் ரிஸ்குவஸ்ட் தானே என்று அந்த பெஅவரது வேண்டுகோளை பெண் ஏற்றுக்கொள்கின்றார்.

அந்த ஹெக்கரிடமிருந்து வந்த முதலாவது குறுந்தகவல் என்னவென்றால் இவர் வீட்டிலிருந்து சாதாரணமான உடையுடன் இருந்த அதாவது உங்களுக்கு தெரியும் முஸ்லிம் பெண்கள் வெளியில் செல்லும் பொழுது ஸ்ஹாப் அல்லது சோல் போட்டுக்கொண்டு செல்வார்கள் ஆகவே அவர் வீட்டில் சாதாரணமாக ஒரு சோல் போட்ட வண்ணம் எடுத்த ஒரு புகைப்படத்தை போட்டு ஹலோ என்று மெசேஸை அனுப்புகின்றார். அதை பார்த்தவுடன் அந்த பெண் பயப்படுகின்றார் என்னுடைய தொலைபேசியில் இருக்கும் புகைப்படம் எப்படி வெளியில் சென்றது என்று. பின்னர் அதோடு தொடர்ந்து அந்த கன்வேகேசன் பின்னர் வட்ஸ்அப்பிற்கும் வருகின்றார். முகப்புத்தகத்தில் இருப்பவர் எவ்வாறு வட்ஸ்அப்பிற்கு வருகின்றார் என்பது தொடர்பாக நான் பின்னர் கூறுகின்றேன். இந்த புகைப்படங்கள் மற்றும் ஒளிப்பதிவுகளை வைத்து பயம் காட்டி பயம் காட்டி இவரின் டிமான்ட் என்னவென்றால் அரை நிர்வாணம் அல்லது முழு நிர்வாணமாக IMO வீடியோ அழைப்பிற்கு வர சொல்லுகின்றார். இவர் ஹெக் பண்ணினது இவருடைய புகைப்படங்களை மட்டுமல்ல வீட்டில் இருப்பவர்களுடன் எடுத்த சாதாரணமாக புகைப்படங்கள் அனைத்துமே பெண்களினுடைய தொலைபேசியில் இருக்கும். அது அனைத்தையும் இந்த ஹெக்கர் எடுத்துக்கொண்டு புதிதாக முகப்புத்தக பக்கம் ஒன்றை உருவாக்குகின்றார். அந்த ஐடியை நான் தற்பொழுது கூற விரும்பவில்லை ஏனென்றால் பின்னர் அந்த முகப்புத்தகத்தை அனைவரும் தேட ஆரம்பிப்பார்கள். எப்படியென்றால் இந்த ஊரைச் சேர்ந்த புரஸ்டிடிவ்ட் அவ்வாறாக அந்த மாதிரியான பெண்மணிகளின்



புகைப்படத்தை போட்டு ஓரளவுக்கு மிகவும் தனித்துவமல்லாத புகைப்படங்களை பதிவேற்றுகின்றார். அதை பதிவேற்றிவிட்டு அவர் அந்த பெண்ணிற்கு பயம் காட்டுகின்றார் எப்படியென்றால் நீ IMO அழைப்பில் உன்னை நிர்வாணமாக காட்டவில்லையென்றால் உன்னுடைய மீதி புகைப்படங்களையும் நான் முகப்புத்தகத்தில் பதிவேற்றி விடுவேன் என்று கூறி மிரட்டுகின்றார்.

இவ்வாறான பிரச்சனை இருந்த பொழுது தான் அவர் என்னிடம் வந்தார். அப்பொழுது நாங்கள் சைபர் கிரைம் பிரிவிற்கு பொலிஸ் மூலமாக சென்று அதாவது தற்பொழுது உள்ள பொலிஸ்மார்களுக்கு தொலைபேசி மற்றும் கணிணியில் உள்ள விடயங்கள் பற்றி எங்களுக்கு தெரிந்தளவு கூட அவர்களுக்கு தெரிவதில்லை. எனவே அவர்களிடம் சென்று இதை எவ்வாறு முறைப்பாடு செய்வது என்றால் அவர்கள் எங்களிடமே திருப்பி ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள். ஆகவே நாங்கள் சொல்வது கூட அவர்களுக்கு விளங்காமல் இருக்கும். எனவே இதை காவல் நிலையத்தில் கூறி எதுவும் நடக்காது.

எனவே இதை முறைப்பாடு செய்ய வேண்டிய ஒரேயொரு இடம் எதுவென்று சொன்னால் சைபர் கிரைம் டிப்பார்ட்மண்ட். அதாவது அந்த இடம் கொழும்பில் இருக்கிறது இதை நான் டிஸ்கிரிப்சனில் அதன் முகவரியை தருகின்றேன். சைபர் கிரைம் டிப்பார்ட்மண்டில் CID ஒரு புளோர். அதிலே அனைத்துமே இருக்கிறது அதாவது கொம்பியூட்டர்ஸ் கிரைம்ஸ் பினான்சியல் போன்ற நிறைய பிரிவுகள் இருக்கிறது. அதில் ஒன்று தான் சைபர் கிரைம் பரிவு. அதற்கு நீங்கள் நேரடியாக போக முடியாது. CID க்கும் நேரடியாக போக முடியாது. முதலில் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் உங்களுக்கு நடந்த விடயங்களை கூறி அப்லை பண்ண வேண்டும். அதன் பின்னர் அவர்கள் அதை வாசித்து பார்த்து உங்களுக்கு அனுமதி தந்து அது வரும் வரைக்கும், அதற்குள் உங்களுக்குத் தெரியும் Datas களை மாற்றலாம், அழிக்கலாம், இல்லாமல் ஆக்கலாம், தப்பிக்கலாம் 2 அல்லது 3 நிமிடங்களில் உங்களுடைய மானத்தை சிதைத்து விட்டு பின்னர் எந்த ஆதாரமும் இல்லாமல் வெளியே சென்று விடலாம்.

எனவே அவ்வாறாக நேரம் எடுப்பதற்கு முன்னர் அவர்களின் மானத்தை வேகமாக பாதுகாத்துக்கொள்ள முடியாத ஒரு கட்டம் இருந்தது. ஆகவே அப்லை பண்ணிய உடனே அந்த தரப்பினருக்கு நான் கூறியது என்னவெனில் அந்த ஹெக்கரை சமாதானப்படுத்தி வைத்திருக்கும்படி அதாவது இப்படி இப்படி நான் புகைப்படம் தாறன் கொஞ்சம் பொறுத்திருங்கள் கொஞ்சம் வெட்கமாக இருக்கிறது எனக்கு தயக்கமாக இருக்கிறது அவ்வாறு கூறி கூறி வைத்திருங்கள் என்று சொன்னேன். இந்த நேரத்தில் மிகவும் நல்ல விடயம் என்னவென்றால் இது கட்டாயமாக நல்ல குடும்பத்து பெண்மணி அவர் தனித்துவமான புகைப்படங்களை வேறு யாரிற்கும் அனுப்பினது இல்லை. அவர் தனது கணவருக்கு மட்டும் தான் அனுப்புகின்றார் கணவனும் நம்புகின்றார் இவர் வேறு யாரிற்கும் தனது புகைப்படங்களை அனுப்பவில்லையென்பதை. அவருக்கும் தெரியும் அந்த புகைப்படங்கள் அவரிற்கு அனுப்பினது தான் என்று. எனவே கணவரும் வெளிநாட்டிலிருந்து தனது வேலையையும் ராஜினாமா செய்து விட்டு அவசரமாக இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்று இங்கு வாறார். ஏனென்றால் நிறைய பேர் இதை பார்க்கிறார்கள் இவரின் மானம் ரொம்பவே கெட்டுப்போகிறது. அப்பொழுது கணவன் மற்றும் மனைவி அழுது கேட்கின்றார்கள் நான் அவர்களை வழிநடத்தியது அதாவது இப்படி இப்படி அழுது அழுது அதாவது அந்த ஹெக்கர் குறுஞ்செய்தி அனுப்புவார் இன்னும் எனக்கு பொறுத்திருக்க முடியாது அவசரமாக அனுப்பு என்று ஆகவே இவரை நான் குறுஞ்செய்தி அனுப்ப வேண்டாம் என்றேன் ஏனென்றால் அவருக்கு ஒரு கட்டத்தில் சந்தேசம் வந்து விட்டது என்னவென்றால் இவர் தான் அனுப்புகின்றாரா அல்லது வேறு யாரும் அனுப்புகின்றாரா என்று. எனவே அவரை நான் குரல் வழி செய்தியை தான் அனுப்ப வேண்டும் என்று கூறினேன். ஆகவே அவரும் அதற்கு ஏற்றாட் போல் செய்திகளை அனுப்பினார். கொஞ்சம் பொறுங்கள் கணவர் வந்திடுவார் பயமாக இருக்குது இன்னும் எனக்கு கொஞ்சம் வெட்கமாக இருக்கிறது நீங்கள் சொல்வதை என்னால் உடனடியாக செய்ய முடியாது என்றெல்லாம் கூறி அந்த ஹெக்கருக்கு பயம் மற்றும் சந்தேகம் வராத அளவிற்கு எங்களுக்கு அந்த CID யில் இருந்து அனுமதி வரும் வரையும் நாங்கள் காத்திருந்தோம்.

பின்னர் அனுமதி கிடைத்ததும் CID யிடம் சென்று அனைத்து விடயத்தையும் கூறிய பின்னர் கொழும்பில் மஜிக் ஸ்டேட்டில் ரிப்போர்ட் பண்ணி CID உரிய இடத்திற்கே வந்து அந்த ஹெக்கரை கண்டு படித்தார்கள். அந்த ஹெக்கரை எவ்வாறு கண்டு பிடித்தோம் என்பதை பின்னர் கூறுகின்றேன். அவர் வேறு யாருமில்லை அந்த பெண்ணின் தூரத்து உறவினரான அந்த பெண்ணை விட வயது குறைந்த ஒரு சின்ன பையன். அந்த பொடியன் சாதாரண சின்ன பொடியனாக இருக்கலாம் ஆனால் அவன் செய்த விடயம் ரொம்ப பயங்கரமானது. பெரியாக்கள் கூட யோசித்து பார்க்க முடியாத வேலை தான் அவர் செய்தது.

தொடரும்...

# சீன பொருளாதாரம் இலங்கைக்கு ஆபத்து! இவர்களை வெளியேற்றுவதே சிறந்த வழி



**கடந்தவார தொடர்ச்சி...**

தொடர்ந்தும் தற்பொழுது இராணுவ பிரசன்னம் நாட்டை பாதுகாக்க வேண்டிய தேவை இராணுவத்தினருக்கு இருக்கிறது. ஆனால் பாராளுமன்ற தேர்தலை வைக்காது தொடர்ந்தும் மாதக்கணக்கிலே வருடக்கணக்கிலே இது இழுபடுமாக இருந்தால் உண்மையில் இந்த நாட்டில் பாரிய நிதி நெருக்கடியினூடாக செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. திரை சேரிகளிலே பணங்கள் இல்லாத நிலை ஏற்படுகின்றது.

நிறுவனங்கள் இயங்கவில்லை, வரிகள் அறவிட முடியாது அரசாங்கம் திண்டாடிப்போகும் நிலை ஏற்படும் இந்த காலகட்டத்திலே இன்னொரு நாட்டினுடைய உதவியை நாடவேண்டும் என்றால் அவை சீனா, அமெரிக்கா, இந்தியா. அவர்களும் தற்பொழுது இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் பொழுது யாரிடம் கையேந்தி எந்த நாட்டை கட்டியெழுப்புவது என்ற கேள்வியும் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே தற்பாதுகாப்பு என்பது மிக முக்கியமாக இருக்கிறது. உள்ளூர் உற்பத்திகளை பெருக்க வேண்டும் விவசாயத்தை பெருக்க வேண்டும். விவசாயத்தை பெருக்கும் பொழுது அந்த விவசாயிகள் நிச்சயமாக பயிர்களை செய்து அதை சந்தைப்படுத்தி விற்று ஒரு ஏற்றுமதியாளராக இந்த நாட்டிலே உருவெடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே தான் இவ் வைரஸ் ஏற்படுத்தியிருக்கின்ற நாட்டை நாம் கண்டிக்க வேண்டுமே தவிர அல்லது இந்த நாட்டை எங்களது நாட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமே தவிர அவர்களுக்கு நாம் பூமாலை போட்டு அவர்களை வரவேற்று அந்த நாட்டை இந்த நாட்டுக்குள்ளே ஒரு சகோதர நாடாக கணிப்பித்து அவர்களுடைய பொருளாதாரம் எல்லாவற்றையும் எங்களது நாட்டுக்குள் கொண்டுவந்து இறுதியாக இலங்கையானது ஒரு குட்டிச்சுவடாக போகின்ற ஒரு நிலவரம் ஏற்படும். இதையொரு எச்சரிப்பாகவும் இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றோம் கொரோனா தொற்று என்பது உலகளாவிய ரீதியிலே ஏற்படுத்தப்பட்டதொன்று.

உலகளாவிய ரீதியிலே ஏற்படுத்தப்பட்ட விடயங்களை மத ரீதியாக பலர் அணுகி ஆராய்ந்து எடுக்கிறார்கள். அது மட்டுமல்லாது இதனை தேர்தலுக்காக பயன்படுத்தி தேர்தல் அரசியல் செய்கிறார்கள். ஆப்கானிஸ்தானை பொறுத்தவரையிலே இலட்சக்கணக்கான மா மூடையுடன் இலட்சக்கணக்கான அரிசி மூடை மற்றும் எண்ணெய் போத்தல்களுடன் அங்கே கொடுத்துவிட்டு பேசாமல் இருக்கிறார்கள் உண்மையிலே அவர்கள் அதை பரப்புரை செய்யவில்லை. இங்கே ஒரு கிலோ, இரண்டு கிலோ மா மற்றும் சீனிகளை கொடுத்து விட்டு படம் எடுத்துப் போடுகின்றார்கள். அதிலே தங்களை பிரசித்திப்படுத்துகின்றார்கள்,

அரசாங்கம் இவ்வளவு கொடுக்கின்றது. உண்மையில் சமூர்த்தி கொடுப்பது கடன் தான் அந்த கடனை மீள் செலுத்த வேண்டிய தேவையிருக்கிறது. ஆகவே தமிழ் மக்களை பொறுத்தவரையில் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பது வேறு, கொரோனா தொற்று என்பது வேறு. உங்களுக்கான தேசியம் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் வகையிலும் எந்த தொற்றுக்கள், வைரஸ்கள் ஏற்பட்டாலும் எமது தேசியம் சுயநிர்ணயம் காக்கப்பட வேண்டும் என்பதிலே நாங்கள் குறியாக இருக்க வேண்டும். ஆனால் நாட்டை பாதுகாக்கும் விடயத்திலே ஒத்துழைப்பு கொடுத்து நாட்டை ஒரு வளம்பெரும் நாடாக மாற்றியமைக்க வேண்டும். சிறிய தீவிலே கொரோனா தொற்றானது தொடர்ந்தும் தனது கோரத்தாண்டவங்களை நடத்துமாக இருந்தால் இரண்டு கோடி மக்களிலே பல கோடி சாவுகளை இந்த நாட்டிலே நாம் சந்திக்க வேண்டி வரும். ஆகவே தனிமைப்படுத்துதல் என்பது அத்தியாவசியமானதொன்று இதற்கு பாதுகாப்பு தரப்பினருக்கும் பொலிஸாரிற்கும் சுகாதார தொண்டர்களுக்கும் நாம் தலை வணங்க வேண்டியவர்களாக தற்பொழுது இருக்கின்றோம். அந்த பாதுகாப்பு கடமைகளை அவர்கள் செய்வதற்கு அதில் ஊடகவியளாலர்களும் தற்பொழுது பங்களிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் அனைவரும் இணைந்து கொரோனா தொற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறித்த ஒரு பாதிரியாரால் யாழில் 17 பேரிற்கு இந்த தொற்று தொற்றியுள்ளது. இவர்களுடைய பிழை என்னவென்றால் கொரோனா தொற்று இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் அரியாலையிலே கொரோனா தொற்றிலிருந்து விடுபடுவதற்கு ஜெபம் செய்வோம் வாருங்கள் என்று பத்திரிகையில் கூட விளம்பரம் கொடுத்திருந்தார்கள். இது முற்றாக தவறான விடயமொன்று. அப்படியாயின் நேரடியாகவே குறித்த போதகர் இத்தாலிக்கோ அமெரிக்காவிற்கோ சென்று அங்கு ஜெபித்து அவர்களை குணப்படுத்தியிருக்கலாம்.

இதுவொரு விதன்டாவாதமான விவாதமாக தற்பொழுது சென்று கொண்டிருக்கிறது. இதனாலேயே ஒரு மதப்பிரச்சாரம் ஏற்படுத்தப்பட்டு மதங்களுக்கிடையே முறுகல் நிலை உருவாகி இருக்கின்றது. தற்பொழுது யாழ்ப்பாண பகுதியை பொறுத்தவரையில் மதக்கலவரம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் கூட இருக்கிறது. குறித்த ஒரு நபர் விடும் பிழைக்காக ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களையும் நாம் குறைசொல்லிவிட்டு போக முடியாது.

இனிவரும் காலங்களில் இவ்வாறாக போலி பிரச்சாரங்கள் அல்லது போலி ஜெபங்கள் செய்பவர்ளை ஒரு சிறைத்தண்டனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் இது உலக நாடுகள் ரீதியாக பரவியிருக்கும் தொற்றுக்காக நாம் உள்நாட்டிலே அடிபட்டுக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. இத்தாலியிலே எத்தனையோ தமிழர்கள் இறந்திருக்கிறார்கள். இலங்கை நாட்டவர்கள் இறந்திருக்கிறார்கள். இன்னும் யாரெல்லாம் இறந்தார்களோ தெரியவில்லை. கொரோனா தொற்றானது முற்றாக ஒழிக்கப்பட்டதன் பின்னர் தான் யார் யார் எவ்வாறு இறந்தார்கள் என்ற விடயம் இனி வெளிச்சத்திற்கு வரும். இதற்கிடையிலே உலகம் அழியப்போகின்றது இந்த மாதத்திற்குள் உலகம் அழிந்துவிடும். விண்ணிலிருந்து ஒரு விண்கல் வருகிறது என்ற ஒரு செயற்பாடும் நாசாவால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனாலும் மக்கள் பீதியடைந்திருக்கின்றனர். இந்த கழியுகத்திலே பாரியளவு உலகளாவிய ரீதியிலே அழிக்கப்படும் என்றும் கூறுகின்றார்கள். இப்படியெல்லாம் மக்கள் பயந்த சூழலுக்குள் தற்பொழுது நின்று கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் அவ்வாறான சூழல் தான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இலங்கையை பொறுத்தவரையிலே மிக அவதானமாக செயற்பட வேண்டியதொன்று. இலங்கைத்தீவு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் குறித்த சீன நாட்டை எங்களது நாட்டிலிருந்து அப்புறப்படுத்துவதனூடாக அதனை பாதுகாத்துக்கொள்ள முடியும். இல்லையேல் அதாளபாதாளத்திற்குள் சென்று எங்களது நாடு அழிந்துவிடும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை. அதற்கான துரித நடவடிக்கைகளை பாதுகாப்பு வட்டாரங்கள் எடுக்க வேண்டும், புலனாய்வு பிரிவுகள் எடுக்க வேண்டும். NIV,CID,CDV போன்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இரணியன்




# பிராந்தியச் செய்திகள்



## G.C.E(O/L) பெறுபேறுகள் எதிர்வரும் இரண்டு தினங்களில் வெளியாகின்றது!

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.




பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பரீட்சை பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த பெறுபேறுகளை இணையதளத்தின் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

இதற்கமைய பெறுபேற்று பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு வலய மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கு கடவுச்சொல் மற்றும் பயனருக்கான பெயர்கள் வழங்கப்படவுள்ளது.அத்துடன், www.doenets.lk என்ற இணையத்தள முகவரிக்கு சென்று தமது பெறுபேறுகளை பார்வையிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தபால் அலுவலகங்களை மீள திறப்பது குறித்து கலந்துரையாடல்

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் தபால் அலுவலகங்களை மீள திறப்பது குறித்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. நாளைய தினம் குறித்த விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ශ්‍රී ලංකා තැපැල් දෙපාර්තමේන්තුව
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka

தபால் அலுவலகங்களை மீள திறப்பது தொடர்பான தகவல்கள் குறித்து விசேட செயலணியை தெளிவுப்படுத்தியுள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் மாத்திரமே தபால் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஏனைய இடர் வலயங்களில் மருந்து விநியோகிக்கும் பணியில் தபால் அலுவலகங்கள் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேட போக்குவரத்து முறைமையினை ஏற்படுத்த இலங்கை போக்குவரத்து சபை தீர்மானம்!

ஊரடங்கு தளர்வின் பின்னர் விசேட போக்குவரத்து முறைமையினை ஏற்படுத்த இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது. ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதன் பின்னர், கொழும்பிலுள்ள அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்ற வருகை தருவோருக்காகவே இந்த முறைமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், நிறுவனத்தின் பெயர், ஊழியர்கள் பணிக்கும் வருகைதரும் இடம், வீதி ஒழுங்கு, பணியாளர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை மின்னஞ்சல் செய்து, சேவையை பெற்றுக்கொள்வதற்காக பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. dgmoperation@sltb.lk இணையத்தள முகவரியில் பிரவேசித்து தகவல்களை பதிவிடுமாறும் அறிக்கப்பட்டுள்ளது.




## யாழில் தன்னை தானே எரியூட்டி உயிரை மாய்த்த சம்பவம்!

யாழ்ப்பாணம் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.மயிலங்காடு பகுதியில் மயிலங்காடு முருகமூர்த்தி ஆலயத்துக்கு அண்மையாக எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த நடேசமூர்த்தி (வயது -82) என்பவரே இவ்வாறு எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.மேலும் அவர் தனக்குத் தானே எரியூட்டி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



## ஊரடங்குச் சட்டத்தை மீறிய 37 ஆயிரம் பேர் கைது!




முழு நாட்டிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறிய மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் வீதிகளில் நடமாடிய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் மார்ச் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 37,572 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை 9650 வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்திலிருந்து வெளிச்செல்ல 5 ஆயிரம் பேர் விண்ணப்பம்!

யாழ். மாவட்டத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக வருகைதந்த வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் தங்களுடைய சொந்த மாவட்டத்திற்குத் திரும்புவதற்கு விண்ணப்பித்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் 2 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அன்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அரசாங்க அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும், தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட 2 ஆயிரம் பேர் அத்தியாவசியமாக செல்ல வேண்டியவர்களே என அவர் குறிப்பிட்டார். அடுத்தக் கட்டமாக சிலர் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், அதி இடர் வலயமாகக் கருதப்படும் மாவட்டங்களுக்கு செல்வதற்காக விண்ணப்பிப்பவர்கள் தற்போதய நிலையில் அனுப்பப்படமாட்டார்கள் என அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.








தளபதி விஜய் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர். இவர் நடிப்பில் விரைவில் மாஸ்டர் படம் திரைக்கு வரவுள்ளது.

இந்நிலையில் உலகமே கொரோனாவால் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது.

இந்தியாவிலும் பெரிய அடி விழுந்துள்ளது, இதனால் அனைத்து தொழில்களும் கடுமையாக பாதிக்க பல நடிகர்கள், நடிகைகள் நன்கொடை கொடுத்து வருகின்றனர்.

இதில் விஜய் தற்போது ரூ 1.30 கோடி கொடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.



தளபதி விஜய் தமிழ் சினிமாவில் கொடிகட்டி பறக்கும் நடிகர். இவர் நடிப்பில் கடைசியாக வந்த பிகில் வசூல் சாதனை படைத்தது.

இந்நிலையில் பிகிலை தொடர்ந்து தற்போது மாஸ்டர் தான் ரசிகர்கள் பெரிதும் ஆவலுடன் எதிர்ப்பார்த்து காத்திருக்கும் படம்.

இந்நிலையில் விஜய்க்கு தமிழகம் தாண்டி கேரளாவிலும் மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டம் உள்ளது. இது எல்லோருக்கும் அறிந்தது தான்.

இந்நிலையில் தற்போது விஜய்யின் மகன் சினிமாவில் கால் பதிக்கவுள்ளதாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

அதுவும் இப்படத்தை விஜய் சேதுபதி தயாரிக்கவுள்ளதாகவும், அதற்கும் விஜய்யிடம் பர்மிஷன் வாங்கியதாக கிசுகிசுக்கப்படுகிறது.இவைஎந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை.

சாய் பல்லவி மட்டும் அவரின் பெற்றோர்களும் சென்ற வருடம் ஹலிதா ஷமீம் இயக்கத்தில் வெளியான சில்லு கருப்பட்டி திரைப்படத்தை பார்த்துவிட்டு மிகவும் எமோஷனால் ஆகிவிட்டார்களாம்.

மேலும் சாய் பல்லவி இயக்குனர் ஹலிதாவிற்கு மெசேஜ் மூலம் வாழ்த்தை தெரிவித்து, மேலும் இதுபோல சிறந்த திரைப்படங்களை இயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்தனை ஹலிதா தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.



இப்போதெல்லாம் ரசிகர்கள் திரைப்படங்களின் வசூல் விவரத்தை தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவது போல், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களின் வுயூவை தெரிந்து கொள்வதிலும் மும்மரமாக உள்ளனர்.

மேலும் முன்னணி நடிகர்களின் திரைப்படங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பனால், அதனுடைய வுயூ யை இணையதளத்தில் வெளியிட்டு ட்ரெண்டாகி வருகின்றனர்.அந்தவகையில் இதுவரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பான திரைப்படங்களில் வுயூவில் டாப் 10 இடத்தை பிடித்த திரைப்படங்களின் விவரம் இதோ..

1. விஸ்வாசம் - 18143

2. பிச்சைக்காரன் - 17696

3. சர்கார்- 16800

4. சீமராஜா - 16766

5. பிகில் - 16473

6. சிங்கம் 3 - 15560

7. நம்ம வீட்டு பிள்ளை - 14774

8.தர்பார் - 14593

9. பைரவா - 14511

10. மருது - 13774



# டிவி சீரியல்களின் நிலைமை!



கொரோனாவால் தேசிய ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் வீடுகளுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தியேட்டர்கள் மூடப்பட்டுவிட்டன. சினிமா, சீரியல் படப்பிடிப்புகள் நின்றுவிட்டன.

தற்போது டிவி சானல்கள் அனைத்தும் இந்த கொரோனாவால் புதிய எபிசோடுகள் தட்டுப்பாட்டால் பழைய சீரியல்களையும் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பு வருகின்றன.

ஊரடங்கு மே 3 ம் திகதி வரை தொடர்கிறது. இதனால் மே 11 முதல் சீரியல்கள் ஒளிபரப்பாகும் என தொலைக்காட்சி வட்டாரத்தில் சொல்லப்படுவதாக தகவல்கள் வருகின்றன. இந்நிலையில் சீரியல்களில் முக்கிய நபராக இருக்கும் ராதிகாவும், குஷ்பூவும் விளக்கம் அளித்துள்ளனர்.

இதில் குஷ்பூ, பெஃப்சி தலைவரிடமும், சுகாதாரத்துறை அமைச்சரிடமும் பேசியதாகவும், அதிக அளவிலான பரிசோதனைகள் நடைபெற்று வருவதால் ஏப்ரல் 27 ம் திகதிக்கு பின்னரே படப்பிடிப்புகள் பற்றி பேச முடியுமென கூறிவிட்டார்களாம். அதோடு வெளி இடங்களுக்கு செல்லாமல், முக்கிய நபர்களை கொண்டு ஒரே நாளில் அதிகபட்ச எபிசோடுகளை படமாக்குங்கள் என சொல்லியதாக குஷ்பூ கூறியுள்ளார்.

அதே போல் நடிகை ராதிகா மே 5 ம் திகதிக்கு பின் படப்பிடிப்புகள் செய்யலாம் என கூறப்படவில்லை, கதையை தயார் செய்து ஷூட்டிங்குக்கு தயாராக இருக்கும் படி கூறியுள்ளேன். கோடம்பாக்கம் ஹாட் ஸ்பாட்டில் இருக்கிறது.

சென்னையில் அதிக பாதிப்பு. ஷூட்டிங் பற்றி இப்போது பேச முடியாது. ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களிலும் படப்பிடிப்பு பற்றி யோசிக்க முடியாது. இந்த சூழ்நிலையை பற்றி எப்படி திட்டமிட்டு பணியாற்றப்போகிறோம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என கூறியுள்ளார்.

தொகுப்பு :- ஹாசினி




## நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உகந்த வெந்தயக்கீரை..!!



வெந்தயக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். எனவே, நீரிழிவு உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவது நல்லது.

வெந்தயக் கீரை சீரண சக்தியைச் செம்மைப்படுத்துகிறது. சொறி, சிரங்கை நீக்குகிறது. பார்வைக்கோளாறுகளைச் சரி செய்கின்றது.

இதனை தொடர்ந்து சாப்பிட்டு வர, காசநோயும் குணமாகும் என்று கூறப்படுகிறது. உட்சூடும் வறட்டு இருமலும் கட்டுப்படும். குடல் புண்கள் நீங்கும்.

வெந்தயக் கீரையை வேக வைத்து அதனுடன் தேன் கலந்து கடைந்து உண்டால் மலம் சுத்தமாவதோடு, உடல் முழுவதுமே சுத்தமாகும்.

வெந்தயக்கீரையை வெண்ணெயிட்டு வதக்கி உண்டால் பித்தக் கிறுகிறுப்பு, தலை சுற்றல், வயிற்று உப்பிசம், பசியின்மை, ருசியின்மை ஆகியவை குணமாகும். இக்கீரை மலம் கழிக்கும்போது ஏற்படும் உளைச்சலையும் எரிச்சலையும் குணமாக்குகிறது.

நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலை செய்ய முடியாமல் இடுப்பு வலிப்பவர்கள் வெந்தயக் கீரையுடன் கோழி முட்டை மற்றும் தேங்காய்ப்பால் சேர்த்து நெய்யில் வேகவைத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வர, இடுப்பு வலி நீங்கும்.

வெந்தயக்கீரையினை அரைத்து நெய் சேர்த்து சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டால் தொண்டைப்புண், வாய்ப்புண் ஆகியவை ஆறும்.

நீ என் அருகில் இருக்கும் போது

எனக்கு உன் பாசம் என்றால்

என்ன

என்றே

புரியவில்லை...!

உன்னை பிரிந்திருக்கும் போது

பாசத்தை தவிர வேறு ஏதும்

எனக்கு தெரியவில்லை...!

## ஒரே இரவில் முகம் வெள்ளையாக டிப்ஸ்

டிப்ஸ் 01 :- தக்காளி (வழுஅயவழ டிநயரவல வனிள) சருமத்தை ஒரே இரவில் வெளுக்க செய்கிறது.

அதாவது தக்காளி பழத்தை பாதியாக நறுக்கி, அவற்றை கஸ்தூரி மஞ்சள் தூளில் விட்டு எடுத்து கொள்ளவும்.

பின்பு சருமத்தில் இந்த தக்காளி பழத்தை சிறிது நேரம் வரை மசாஜ் செய்ய வேண்டும். பின்பு சுமார் 10 அல்லது 15 நிமிடங்கள் வரை வைத்திருந்து. பின்பு குளிர்ந்த நீரால் சருமத்தை கழுவ வேண்டும். இந்த முறையை தினமும் இரவு தூங்குவதற்கு முன் செய்து வர வேண்டும்.

இவ்வாறு செய்வதினால், சருமத்தில் உள்ள கருமை திட்டுகள் மறைந்து, சருமத்தை வெள்ளையாக மாற்ற பெரிதும் உதவுகிறது.

டிப்ஸ் 02 :- அரைத்துண்டு தக்காளி பழத்தை (வழுஅயவழ டிநயரவல வனிள) எடுத்துக்கொள்ளவும், பின்பு அவற்றை சர்க்கரையில் விட்டு எடுத்துக்கொள்ளவும்.

பின்பு அவற்றை முகத்தில் தடவி, சிறிது நேரம் மசாஜ் செயுங்கள், பின்பு 10 நிமிடங்கள் வரை வைத்திருந்து, குளிர்ந்த நீரால் சருமத்தை கழுவ வேண்டும்.

இந்த முறையை தினமும் செய்து வர பொலிவிழுந்த சருமம், புத்துணர்ச்சியுடன் காட்சியளிக்கும்.

டிப்ஸ் 03 :- தக்காளி (வழுஅயவழ டிநயரவல வனிள) மற்றும் உருளை கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து கொள்ளவும். பின்பு அவற்றை போஸ்ட்டு போல் நன்றாக அரைத்து கொள்ளவும்.

இந்த கலவையை சருமத்தில் தடவி குறைந்தது 15 நிமிடங்கள் வரை வைத்திருக்கவும்.

பின்பு குளிர்ந்த நீரால் முகத்தை கழுவ, சருமத்தில் உள்ள கரும்புள்ளிகள், கரும் திட்டுகள் ஆகியவை மறைய செய்யும், மேலும் முகத்தை வெள்ளையாக மாற்றும்.

டிப்ஸ் 04 :- தக்காளி பழத்தை (வழுஅயவழ டிநயரவல வனிள) பாதியாக நறுக்கி கொள்ளவும், பின்பு அந்த தக்காளி பழத்தை முல்தானி மெட்டியில் விட்டு எடுத்துக்கொள்ளவும்.

பின்பு அவற்றை சருமத்தில் தேய்த்து சிறிது நேரம் மசாஜ் செய்து, பின்பு சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

இந்த முறையை வாரத்தில் இரண்டு முறை செய்து வர, சில நாட்களில் முகம் வெள்ளையாக (அரபயஅ எநடடயலையபய அயசய வனிள) மாறுவதை தாங்கள் உணர முடியும்.





## முடி வளர்ச்சிக்கு உதவும் வெங்காய சாறு எப்படி தெரியுமா...?

வெங்காயம் முடி வளர்ச்சிக்கு ஒரு சிறந்த மருந்தாக இப்பொழுது பயன்படுத்தப்படுகிறது. வெங்காயத்திற்கு நுண் கிருமிகள் மற்றும் பூஞ்சைகளை எதிர்த்து போராடும் தன்மை உள்ளது.

வெங்காயம் சாறினை தலை முடிக்கு பயன்படுத்துவதால் முடி உதிர்வு நீங்கி, முடி அடர்த்தியாக வளர செய்கின்றது.

சிறிதளவு சிறிய வெங்காயத்தை எடுத்து கொள்ளுங்கள் அவற்றை மிக்ஸி ஜாரில் சேர்த்து தண்ணீர் ஊற்றாமல் நன்றாக அரைத்து கொள்ளுங்கள். பின் அரைத்த இந்த கலவையை ஒரு பவுலில் நன்றாக வடிகட்டி எடுத்து கொள்ளுங்கள். வெங்காயம் சாறை எடுத்து தலையில் நன்றாக தடவவும். விரல்களால் சுழல் வடிவத்தில் நன்றாக மசாஜ் செய்யவும். ஒரு மணி நேரம் அப்படியே விட்டு விடவும்.

வெங்காய வாசனை முடியில் இல்லாதவாறு வாசனையுள்ள ஷாம்பூவால் தலை நன்றாக அலசவும். வாரம் 1 முறை, என்று 2 மாதங்களுக்கு இந்த முறையை பின்பற்றி நல்ல பலன் பெறலாம்.

முடி உதிர்வு நீங்கி, முடி அடர்த்தியாக வளர 1:.4 கப் வெங்காயம் சாறுடன், ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். இந்த கலவையை தலை முடியின் வேர் பகுதியில் நன்றாக அப்ளை செய்து கொள்ளுங்கள். பின் 30 நிமிடங்கள் கழித்து தலை முடியை ஷாம்பு போட்டு நன்றாக அலச வேண்டும்.

இந்த முறையை இரண்டு வாரத்திற்கு ஒரு முறை கடைப்பிடித்து வர முடி உதிர்வு நீங்கி, முடி அடர்த்தியாக வளர ஆரம்பிக்கும்.

கறிவேப்பிலை முடி வளர்ச்சியை அதிகரிப்பதுடன், வலிமையான மற்றும் கருமையான முடியினை வளர செய்யும். எனவே ஒரு கையளவு கறிவேப்பிலையை நன்கு மைபோல் அரைத்து கொள்ளவும். பின் அரைத்த கறிவேப்பிலையுடன் இரண்டு டேபிள் ஸ்பூன் வெங்காயம் சாறினை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.

இந்த கலவையை தலையில் நன்றாக அப்ளை செய்து, ஒரு மணி நேரம் வரை அப்படியே வைத்திருக்கவும். ஒரு மணி நேரம் கழித்த பின் ஷாம்பு போட்டு தலை முடியை அலச வேண்டும்.

தொகுப்பு :- சப்தஹி

# கொரோனாவால் அபாய கட்டத்தை நோக்கி நகரும் இலங்கை



சீனாவின் வுகான் மாகாணத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் உருவான ஆட்கொல்லி கொரோனா என்னும் வைரஸ் உலக நாடுகளின் அசமந்தபோக்கால் 2020 இல் வீரியம் பெற்று இப்பத்தி எழுதும் வரை உலகளவில் 200,000 மக்கள் உயிரிழந்தும் சுமார் 28 இலட்சம் மக்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டும் உள்ளனர். இதில் உலக வல்லரசான அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

உலகில் சுமார் 200 நாடுகளுக்கு மேல் தாக்கியுள்ள இந்த கொரோனா வைரஸ் இலங்கை நாட்டையும் அச்சுறுத்தி வருகின்றது. எமது நாட்டில் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இறுதிப் பகுதியில் கொரோனா தொற்று முதலாம் நபர் கண்டு பிடிக்கப்பட்டார். இவர் சீனாவில் இருந்து இங்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசு மிக வேகமாக எடுத்த சில நடவடிக்கைகளால் கொரோனா தொற்றின் வேகம் உலக நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைவாகவே காணப்பட்டது.

கொரோனா தொற்று இலங்கையில் கண்டுபிடிக்க முன்னரே இலங்கையில் உள்ள பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் என்பன மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டமை ஊரடங்கு நாடு முழுவதும் அமுல் படுத்தப்பட்டமை விமானப்போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டமை மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவரத்து தடுக்கப்பட்டமை வெளி நாடுகளில் இருந்து வந்த இலங்கைமக்கள் உடனடியாக தனிமைப்படுத்தல் முகாம்களில் உருவாக்கி அங்கு தங்கவைக்கப்பட்டமை. முப்படையினரையும் இச் செயற்பாட்டுக்கு முடக்கிவிட்டமை சுகாதாரப் பிரிவினர் முழு வீச்சுடனும் அர்ப்பணிப்புடனும் தமது கடமைகளை செய்தமை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டாலும் மக்களுக்கான நிவாரணங்களை அரசு முன்னெடுத்தமை அத்துடன் சமூர்த்தி பயனாளிகளுக்கு 5000 ரூபாய் உடனடி நிவாரணம் வழங்கியமை நாள்கூலி வேலை செய்வோர் பஸ் சாரதிகள் நடத்துனர்கள் ஊடகவியலாளர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் ரூபாய் 5000 கொடுப்பனவு வழங்கியமை வங்கிகளில் கடன் பெற்றோர் லீசிங் வாகனம் பெற்றவர்கள் அனைவரின் திருப்ப செலுத்தும் தவணை கட்டணங்களை 6 மாதகாலத்துக்கு பிற்போட்டமை போன்ற செயற்பாடுகளையும் அரசு துரிதமாக மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து கொழும்பு கம்பஹா, களுத்துறை, கண்டி, அம்பாறை போன்ற மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் பகுதியளவில் நீக்கும் செயற்பாட்டை அரசு மேற்கொண்டது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் அதிகாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டது. அத்துடன் போக்குவரத்து சேவைகளையும் பகுதியளவில் ஆரம்பித்தது மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவரத்துக்கு அரச தனியார் ஊழியர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். மரணச்சடங்கு மற்றும் அவசர தேவையின் நிமித்தம் மாவட்டங்களுக்கு இடையே பயணிப்பதற்கு பாஸ் நடைமுறை பொலிசாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் 130 ஆக மட்டுப்படுத்தப்பட்டு இருந்த கொரோனா தாக்கம் சடுதியாக அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிந்தது. ஊரடங்கு சட்டம் நீக்கம் தொடர்பாக அரச மருத்துவ சங்கம் நோய் தொற்று நீக்கும் பிரிவு அரச வைத்தியர் சங்கம் என்பன கடுமையாக அரசை எச்சரித்தனர். இது ஒரு விசப்பரீட்சை ஊரடங்கை உடனடியாக நீக்க வேண்டாம் என எச்சரிக்கை பன்னியும் அரசு இவ்வளவு காலமும் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தவிடுபொடியாக்கிய நிலைமை தான் இப்பொழுது காணப்படுகின்றது.

இதில் முக்கியமான இன்னோர் விடயம் ஊரடங்கு சட்டத்தை யாழ்ப்பாணத்தில் நீக்கியமை உண்மையில் யாழ்ப்பாணத்தில் சுவிஸ் போதகரின் ஆராதணையில் கலந்து கொண்டவர்களுக்குத் தான் இந்த கொரோனா தொற்று ஏற்பட்டது. முதலாவது தொற்றுக்குள்ளானவர் தாவடி பகுதியை சேர்ந்தவர் உடனடியாக சுதாகரித்துக் கொண்ட யாழ் மாவட்ட சுகாதாரப் பிரிவினர் மற்றும் வைத்திய அதிகாரிகள் படையினர் ஆகியோரின் செயற்பாட்டால் அது பாரியளவில் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டதுடன் யாழ் மாவட்டத்தில் மொத்தமாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16 ஆக உள்ள நிலையில் தற்பொழுது ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்ட செயலானது அங்கு மீண்டும் கொரோனா தொற்று அதிகரிக்க காரணமாக அமையப் போகின்றது என்பது அண்மையில் இடம்பெற்ற சம்பவம் கட்டியம் கூறி நிற்கின்றது. அது என்னவெனில் கொழும்பில் தனிமைப்படுத்தலில் இருந்த யாழ்ப்பாணப் பகுதியை சேர்ந்த சுமார் 7 பேர் கோப்பாய் பகுதியை சேர்ந்த லொறி ஒன்றில் ஒவ்வொருவரும்தலா 2500 ரூபாய் கொடுத்து தனிமைப்படுத்தலில் இருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தமை யாழ் மாவட்ட வைத்திய அதிகாரிகளை மட்டுமன்றி யாழ் மக்களையும் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

அவர்கள் உடனடியாக பொலிசார் மற்றும் பாதுகாப்பு படைகளின் உதவியுடன் பிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இது நாள் வரையும் வைத்தியர்களும் படையினரும் செவிலியர்களும் போராடி கட்டுப்படுத்தி வைத்திருந்த கொரோனா தாக்கத்தை ஊரடங்கு நீக்கத்தாலும் அதை பயன்படுத்தி சிலர் மேற்கொண்டுள்ள பொறுப்பற்ற சமூக அக்கறையற்ற செயற்பாட்டாலும் பாரியவிளைவுகளை சந்திக்க வேண்டியுள்ள தாக யாழ் மாவட்ட வைத்திய பணிப்பாளர் கூறியுள்ளார். இதைவிட இன்னோர் விடயம் யாழ் மாவட்டத்தில் சுமார் 6 இலட்சம் மக்கள் உள்ளனர் இதில் ஒரு சில ஆயிரம் பேரளவில் தான் கொரோனா தொற்று உள்ளதா எனப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இது சமூக பரவலுக்கு செல்லாது என தற்பொழுது கூற முடியாது என வைத்திய பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் இருந்து ஊரடங்கு தற்காலிகமாக நீக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தப்பி வருபவர் அதிகரித்து காணப்படுகின்றது. முற்றும் நோய் தொற்று அபாயம் உள்ள மாவட்டங்களில் இருந்து அபாயமற்ற மாவட்டங்களுக்கு தப்பி வருவதற்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது. கடந்த 20 ஆம் திகதி ஊரடங்கு நீக்கப்பட்ட மாவட்டங்களில் மதுபானசாலைகள் திறக்கப்பட்டன. முற்றும் சிகையலங்கரிப்பு நிலையங்களும் திறக்கப்பட்டன. இதற்கு சுகாதாரப் பிரிவினர் கடுமையாக எச்சரித்ததன் விளைவாக மதுபானசாலைகள் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டன. அத்துடன் சிகையலங்கரிப்பு நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உணவகங்கள் மூடப்பட்டன.

அரசு மிக இறுக்கமாக பேணிய விடயங்களை தளர்த்திய பொழுது கொரோனா தொற்று அதிகரித்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. ஏன் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது பாராளுமன்ற தேர்தலை வைத்து 2/3 பெரும்பான்மையை பெற்றுவிட வேண்டும் என்னும் அவாவிலும் தேர்தல் வைக்காமல் போனால் நாடாளுமன்றத்தை கூட்டச்சொல்லி எதிர்க்கட்சிகள் கூச்சல் போடும் என்பதற்காக அவசரப்பட்டு ஊரடங்கை நீக்கி நிலைமை சுமூகமாக உள்ளதாக காட்ட முயற்சித்ததால் கொரோனா தொற்றின் வேகம் அதிகரித்துள்ளது. ஆனால் அரசு கூறும் விடயம் யாதெனில் தேர்தலுக்கு அப்பால் நாடு தொடர்ந்தும் முடக்கப்பட்டால் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டிவரும் எனவும் அதனை மீட்கவே ஊரடங்கை தளர்த்தி சிலசெயற்பாடுகளை ஆரம்பித்ததாக கூறியுள்ளது.

2020 ஆம் ஆண்டு பெப்ரவரி இறுதிப் பகுதியில் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்ட பொழுது சுகாதாரப் பிரிவினர் மற்றும் வைத்திய அதிகாரிகளின் பரிந்துரைப்புக்கு அமையவே ஊரடங்கை அமுல்படுத்தி உள்ளேன் என ஜனாதிபதி கோட்டபாய கூறினார். தனித்துதான் இதில் செயபடவில்லை என கூறியிருந்தார். தற்பொழுது சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை பண்ணியும் அதனை ஒரு பொருட்டாக கருதாமல் ஊரடங்கை நீக்கியமைக்கு காரணம் என்ன? தேர்தல் தான் அவரது ஒரே இலக்காக தோன்றுகின்றது. தேர்தலை எப்படியாவது வைத்து பெரும்பான்மையை பெற்றுவிட வேண்டும் என்பதே ஆகும். தான் நாட்டு மக்களை நேசிப்பவனாகவும் இத்தாலி போன்று மக்கள் அழிவதை அனுமதிக்க முடியாது என கொரோனா தொற்று இலங்கையில் ஆரம்பித்த வேளையில் கூறிக்கொண்டு அதனை கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்ட கோட்டபாய அவர்கள் இப்பொழுது தனது சுயநல அரசியலுக்காக இவ்வாறு ஊரடங்கை நீக்கி கொரோனா தொற்று அதிகரிக்கப் பண்ணுவது மிகப் பெரிய அழிவை இலங்கை சந்திக்கவுள்ளது. இத்தாலி, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஸ்பெயின் போன்ற நாடுகள் கொரோனாவின் வீரியத் தன்மை புரியாமலும் வல்லரசு என்னும் மமதையில் செயற்பட்டதால் இன்று அந் நாடுகளில் அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றது. அதனை விட அதிக உயிர்கள் இலங்கையில் காவு கொள்ளப்படுமோ என அச்சம் இப்பொழுது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஆகவே அரசு உடனடியாக ஊரடங்கை நாடு முழுவதும் அமுல்படுத்தி ஓர் இறுக்கமான சூழ்நிலையை உருவாக்கி மக்களின் உயிர்களை பாதுகாக்க முன்வருவதோடு தற்பொழுது தேர்தலை நடாத்தும் சூழ்நிலையை பிற்போடுவது சாலச்சிறந்தது ஆகும். மற்றும் எதிர்க்கட்சிகளும் தமது குறுகிய அரசியல் சுயலாபத்துக்காக அரசை குற்றம் சாட்டாமல் கொரோனா தொற்று ஒழிப்புக்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி நாட்டுக்கும் எமது மக்களுக்கும் ஏற்பட இருக்கும் பாரிய அழிவை தடுக்க கைகோர்க்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். தற்பொழுது வரையும் 467 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலை தொடருமாயின் இத்தாலி, அமெரிக்கா போல எமது நாட்டையும் காப்பாற்ற முடியாமல் போகும். மக்களும் தமது பொறுப்புணர்ந்து காலத்தின் தேவையறிந்து செற்பட்டு ஒட்டுமொத்த சமூகத்தையும் கலங்கடிக்கும் கொரோனா என்னும் கொடியவனை நாட்டில் இருந்து விரட்ட திடசங்கற்பம் பூணுவோமாக.

**கிறுக்கன்**

# உலகில் பலம்வாய்ந்த இயக்கமாக 1990–2009 வரை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் – ஐ.நா. அறிக்கை



**கடந்தவார தொடர்ச்சி...**

தமிழரான இலங்கையின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் 2005 இல் படுகொலை செய்ததானது இவ்வமைப்பின் சர்வதேச பின்புலத்துக்கு இறுதி அடியாக இருந்திருக்கலாம். இச்சூழலில் எல்ரிரிஈ க்கு எதிரான அதன் இறுதித் தாக்குதலுக்காக இலங்கை அரசாங்கம் ஏனைய நாடுகளுடன் பங்காளர் உறவுகளை கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொண்டது.

45. 2005 ஆம் ஆண்டில் நடந்தேறிய தேர்தல்களின் பின்னர், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைத் தாம் மதிக்கப் போவதாக அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. இனரும் உறுதியளித்த போதிலும், 2006 ஒகஸ்டில் மீண்டும் பாரிய அளவிலான ஆயுதந்தாங்கிய போராட்டம் ஆரம்பிக்கும் வரை இரு தரப்பினரும் தமது இராணுவச் சீண்டல்களைத் தொடர்ந்தனர். கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டில் இருந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்கும் மாவில் ஆறு நீர்த்தேக்கத்தின் அணைக் கதவுகளை எல்.ரி.ரி.ஈ மூடியதும், எல்.ரி.ரி.ஈ. இன் பிடியில் இருந்து கிழக்கு மாகாணத்தை மீட்பதற்காக ஆயிரக்கணக்கான படைவீரர்களை தாக்குதல் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுத்தியது. கருணாப் பிரிவினரின் உதவியுடன், சுமார் இரு தசாப்தங்களின் பின்னர் முதற்தடவையாக 2007 ஜூலை மாதத்தில் அரசாங்கம் முழுமையாக கிழக்கு மாகாணத்தைத் தன் வசப்படுத்தியது. (18)

46. கிழக்கு மாகாணத்தில் மற்றும் 2008 ஜனவரியில் வட மாகாணத்தின் சில பகுதிகளில் அரசாங்கப் படையினர் அடைந்த இராணுவ வெற்றி காரணமாக எல்.ரி.ரி.ஈ. வன்னிப் பிரதேசத்தில் மாத்திரம் பாரிய இடப்பரப்பை தன் ஆதிக்கத்தில் வைத்திருக்க முடிந்தது. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தின் நான்கு மாவட்டங்களுள், தமது நடை முறைத் தலைநகரான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்கள் “எல்.ரி.ரி.ஈ. இன் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தன. வவுனியாவின் வட பகுதி, வடமேற்கு மன்னார் மற்றும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் சிறிய சில நிலப்பரப்புக்களையும் அது தன் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தது.

47. கிழக்கில் கிடைத்த இராணுவ வெற்றியினால் உற்சாகமடைந்த அரசாங்கம், கிட்டத்தட்ட இரு வருடங்களாக மேற்கொண்ட போர்த் தந்திரத் தயாரிப்புக்களின் பின்னர் 2008 ஜனவரி 16ஆம் திகதி முழு அளவிலானதொரு இராணுவ நடவடிக்கையை அறிவித்தது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், டோக்கியோ இணைத் தலைமைகள் மற்றும் ஏனைய உறுப்பு நாடுகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைரத்துச்செய்வதற்கான மற்றும் இராணுவத் தீர்வொன்றைப் பெறுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுத்த போதிலும், அதன் இடப்பரப்பில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் உரிமையையும் ஏற்றுக் கொண்டன.

2008 பெப்ரவரி நடுப்பகுதியளவில், நாடு பூராவும் தற்கொலைத் தாக்குதல்களை எல்.ரி.ரி.ஈ தீவிரப்படுத்திய போது யுத்தப் பிரதேசத்துக்கு வெளியேயுள்ள பொதுமக்கள் மீதான யுத்தத்தின் தாக்கம் அச்சுறுத்தும் நிலையை அடைந்தது. அரசாங்கத்தின் வான் குண்டுத் தாக்குதல்களும் ஆழ ஊடுருவித் தாக்கும் நடவடிக்கைகளும் யுத்தப் பிரதேசங்களில் உள்ள பொதுமக்களை மேலும் தாக்கமுறச் செய்தன. 2008 செட்டெம்பரில் கிளிநொச்சியை நோக்கிய அதன் இறுதி இராணுவத் தாக்குதலை அரசாங்கம் மேற்கொண்டது. ஐஐஐ. குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை

48. அதன் ஆணைப் பிரகாரம், செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக “குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லையைக் கவனத்துக்கெடுத்து’ யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது (செப்டெம்பர் 2008 மே 2009) மற்றும் அதனை உடனடுத்து நடைபெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் பற்றி இப்போது குழு கவனம் செலுத்துகிறது. குற்றச்சாட்டுக்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லையே குழு பொறுப்புக்கூறல் பற்றி வழங்கும் ஆலோசனையின் இயல்பை நிர்ணயிக்கிறது.

அத்தியாயம் IV இல், இம்மீறல்கள், நிரூபிக்கப்படின், சர்வதேச சட்டத்தை மீறியதாக அமையுமா என்பதை நிர்ணயிப்பதற்காக இக்குற்றச்சாட்டுக்களை சட்டக் கண்ணோட்டத்தில் குழு சீர்தூக்கிப் பார்க்கிறது.

(19)அ. குற்றச்சாட்டுக்களைச் சீர் தூக்கிப் பார்ப்பதற்கான முறைமை

49. யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கவனமாக ஆராய்ந்து அவற்றின் உண்மையை எடைபோடுவதின் அடிப்படையில் குழுவின் மதிப்பீடு அமைந்துள்ளது. எழுத்து மூலமான தகவல்கள் மற்றும் பல்வேறு நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் ஆகியவற்றை குழுவின் பரிசீலனை உள்ளடக்கியது.

அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் பல்வேறு முகவர்கள், திணைக்களங்கள், நிதியங்கள், அலுவலகங்கள் மற்றும் ஐ.நா. வேலைத் திட்டங்கள், ஏனைய அரசாங்கத்துக்கிடையிலான அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அத்துடன் இலங்கை பற்றிய நிபுணர்களை உள்ளிட்ட தனி நபர்களினால் எழுதப்பட்ட ஏனைய விவரணங்கள் ஆகியவற்றை எழுத்து மூலமான மூலங்கள் கொண்டிருந்தன.

சுழியோடி




## மலிவான மூச்சுக் கருவி!

ஜேர்மனி அரசு, கொரோனா சவாலை எதிர்கொள்ள, அந்நாட்டின் திறமையாளர்களை வைத்து, அண்மையில் ஒரு போட்டியை நடத்தியது. 'நாம் Vs வைரஸ்' என்ற இந்தப் போட்டியில், 42 ஆயிரம் பேர் பங்கேற்றனர். வைரஸ் பரவலை தடுப்பதற்கு உதவும், 'மொபைல் அப்'கள், மருந்துகளையும் சோதனை கருவிகளையும், தேவையான இடத்தில் கொண்டு சேர்க்க உதவும் இணையதளம், தகவல் தரும் மென்பொருட்கள் என, பல யோசனைகளை, போட்டியில் பங்கேற்றோர் முன்வைத்தனர்.

இரண்டு நாட்கள் நடந்த இந்த போட்டியின் முடிவில், 20 தரமான யோசனைகளை, ஜேர்மன் அரசு தேர்ந்தெடுத்துள்ளது.அதில் ஒன்று, 'ஓப்பன் வென்ட்' என்ற வென்டிலேட்டர் வடிவமைப்பு. முழுதும் முப்பரிமாண அச்சியந்திரத்தில் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஓப்பன் வென்ட் செயற்கை மூச்சுக் கருவியில், ஒரு பை போன்ற அமைப்பை, சுருக்கி விரிய வைக்கும் மோட்டார் பொருத்தப்பட்டு உள்ளது.

இதை இயக்கும் மூளையாக, விலை குறைந்த ஒரு தகடும் சில்லும், எளிய மென்பொருளும் உருவாக்கப்பட்டுஉள்ளன.குறைந்த செலவில் தயாரிக்க உகந்த இந்தக் கருவியின் தயாரிப்பு முறையை, இலவசமாகவே எவரும் பயன்படுத்தலாம் என, ஜேர்மன் அரசு அறிவித்துள்ளது.




## முகமூடி விற்கும் இயந்திரம்!

தொழில்நுட்பம் பழையது தான். என்றாலும், நவீன கொரோனா வைரசைத் தடுக்க அது உதவும். தீவு நகரமான ஹாங்காங்கில், ஒரு தொழில் அதிபர், தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மூலம் முக கவசங்களை இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஹாங்காங்கில், 35 தானியங்கி முகமூடி வழங்கும் இயந்திரங்களை அந்த தொழிலதிபர் நிறுவ இருக்கிறார். மருத்துவத் தரத்திலான முக கவசங்களை, வசதியற்றவர்களுக்கு தரவேஇந்தஏற்பாடு.இந்தஇயந்திரத்தை இயக்க ஆட்கள் தேவையில்லை என்பதால், முன்கூட்டியே குடியிருப்பு பகுதிகளில், குடும்பங்களுக்கு ஒரு அட்டையை தன்னார்வலர்கள் வினியோகித்து வருகின்றனர்.




ஏப்ரல் இறுதிக்குள் நிறுவப்படும் இயந்திரங்களில், அட்டையை செலுத்தி, ஒருவர், 5 முகமூடிகளை பெறலாம். வாரத்திற்கு ஒரு முறை என, அடுத்த, 10 வாரங்களுக்கு இலவசமாக இப்படி முகமூடிகளை தருவதற்கு, அந்த தொழிலதிபர் திட்டமிட்டுள்ளார். நம்மூரில் இப்படி யாரும் தாராள பிரபுக்கள் செய்வார்களா?

## பேஸ்புக்கில் கசிந்த மில்லியன் கணக்கான தொலைபேசி இலக்கங்கள்




பேஸ்புக்கில் தனி நபர் தகவல்கள் அவ்வப்போது கசிவது வழுங்கமாக இருந்தது.

எனினும் சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஹேம்பிறிஜ் அனாலிட்டிக்கா சம்பவத்திற்கு பின்னர் இவ்வாறான பிரச்சினைகள் சற்று குறைந்திருந்தது.

எனினும் தற்போது தனி நபர் தகவல்கள் கசிதல் பூதாகரமாக கிளம்பியுள்ளது.

அதாவது சுமார் 309 மில்லியன் தொலைபேசி இலக்கங்கள் உட்பட ஏனைய தகவல்கள் பேஸ்புக்கில் கசிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இவற்றில் 267 மில்லியன் தகவல்கள் Dark Web இல் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு தகவலின் பெறுமதியானது 0.0002 சதங்கள் வீதம் அனைத்து தகவல்களும் மொத்தமாக 500 பவுண்ட்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.பிரபல தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றே இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

## புதிய சரித்திரம் படைத்தது Netflix சேவை

கட்டணம் செலுத்தப்பட்ட வீடியோ பார்வையிடும் சேவையை Netflix நிறுவனம் வழங்கி வருகின்றது.இந்நிறுவனத்திற்கு ஏற்கனவே உலகம் முழுவதிலும் மில்லியன் கணக்கான சந்தாதாரர்கள் காணப்படுகின்றனர்.



இந்நிலையில் தற்போது மேலும் 15 மில்லியன் சந்தாதாரர்கள் புதிதாக இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி வருமானமும் 27.6 சதவீத்தினால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது உலக நாடுகளில் நிலவும் லொக்டவுன் நிலைமை காரணமாக மக்கள் பொழுதுபோக்கிற்காக பல்வேறு இணைய சேவைகளை பயன்படுத்தி வருகின்றனர்.அதேபோன்றே Netflix சேவையையும் பயன்படுத்துகின்றமையினால் இந்த அபார மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'அறியாமை கூட தன்னம்பிக்கை போல வெளிப்படும். ஒருவர் மிகையான துணிச்சலோடு வெளியே திரிந்தால், அவருக்கு சில அடிப்படை விஷயங்களே இன்னும் தெரியவில்லை என்று பொருள்.'**

ஓவென் கோல்பெர்
அயர்லாந்து எழுத்தாளர்



# விளையாட்டு செய்திகள்



## ஜேம்ஸ் ஆண்டர்சனையே கதிகலங்க வைத்த தென்னாபிரிக்கா வீரர்!

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிரேம் ஸ்மித்துக்கு பந்து வீசுவது. எளிதான காரியம் அல்ல என இங்கிலாந்து கிரிக்கெட் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சார்பில் அதிக விக்கெட்டுகளை சாய்த்த பெருமைக்குரிய ஜேம்ஸ் ஆண்டர்சன், தனது கிரிக்கெட் அனுபவத்தில் பந்துவீசுவதற்கு அச்சப்பட்ட துடுப்பாட்ட வீரர் யார் என்பதற்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'இதே பிரச்சனை முதன்முறையாக அவருக்கு எதிராக 2003ஆம் ஆண்டு விளையாடும்போது எனக்கும் இருந்தது. அந்த நேரத்தில் நான் பந்தை அவுட் ஸ்விங் மட்டுமே செய்வேன். அதாவது வலது கை துடுப்பாட்ட வீரருக்கு விக்கெட்டில் இருந்து பந்தை வெளியே கொண்டு செல்வேன். அப்போது இடது கை துடுப்பாட்ட வீரர்ளுக்கு என்னால் அவுட் ஸ்விங் பந்து வீசத் தெரியாது.

நான் அவருடைய வலிமைக்கு இரையாகிக் கொண்டிருந்தேன். இது எனக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. எனது பந்துகளை லெக்-சைட் எளிதாக விளாசினார். 2003ஆம் ஆண்டு தொடரில் இரண்டு இரட்டை சதம் அடித்தார். அவருக்கு பந்து வீசுவது எளிதான காரியம் அல்ல" என கூறினார்.

## இந்தியாவுடன் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நடத்த ஆஸி திட்டம்!

இரு நாடுகளுடையிலான நட்பு வலுவாக உள்ளதால், வருங்காலத் தொடர்களில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரைத் திட்டமிட்டு வருவதாக கிரிக்கெட் அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கிரிக்கெட் அவுஸ்ரேலியா தலைமைச் செயல் அதிகாரி கெவின் ராபர்ட்ஸ் கூறுகையில், 'இந்த சீஸனில் 5 டெஸ்டுகள் கொண்ட தொடரை நடத்துவது சாத்தியமில்லை. ஆனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் கிரிக்கெட் அவுஸ்ரேலியா இடையிலான நட்பு வலுவாக உள்ளது.

வருங்காலத்தில் இரு அணிகளும் 5 டெஸ்டுகள் கொண்ட தொடரை விளையாடவேண்டும் என்று கருத்துகளைப் பரிமாறிக்கொண்டுள்ளோம்.

வருங்காலத் தொடர்களில் இதை நடைமுறைப்படுத்தப் போகிறோமா எனப் பார்க்க வேண்டும். அடுத்த டெஸ்ட் அட்டவணையில் இது சாத்தியமாகலாம்' என்று கூறியுள்ளார்.

இந்த வருட இறுதியில் இந்திய அணி, அவுஸ்ரேலிய மண்ணில், நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

கடந்த 2018-2019 ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் தொடரில், இந்தியா அணி 2-1 என டெஸ்ட் தொடரை முதல் முறையாக வென்று, அவுஸ்ரேலியா மண்ணில் வெற்றிபெற்ற முதல் ஆசிய அணி என்ற சாதனையை படைத்தது.



## ஐ.பி.எல். தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் இந்திய மதிப்பில் 3,300 கோடி ரூபாய் வரை இழப்பு!



கொரோனா வைரஸ் (கொவிட்-19) அச்சுறுத்தல் காரணமாக நடப்பு நடத்த திட்டமிடப்பட்டிருந்த ஐ.பி.எல். ரி-20 தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் 8 அணிகள் ஒட்டுமொத்தமாக இந்திய மதிப்பில் 3,300 கோடி ரூபாய் வரை இழப்பை சந்திக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 3269 கோடி ரூபாய் ஒளிபரப்பு உரிமை மற்றும் அனுசரணை விளம்பர வருவாய் போன்றவை அடங்கும்.

மேலும் போட்டிகள் நடைபெறும் மாநில சங்கங்களுக்கும் பார்வையாளர் அனுமதி கட்டணம் கிடைக்காது என்பதால் மொத்தம் 250 கோடி ரூபாய் வரை வருவாயை இழக்கும்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் உலகளாவிய தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் உரிமைகளை 5 ஆண்டுகளுக்கு என மொத்தம் 16,300 கோடி ரூபாய்க்கு ஸ்டார் இந்தியா பெற்றது.

மேலும் விவோ நிறுவனத்துக்கு 'போட்டி அனுசரணை' உரிமையும் 2000 கோடி ரூபாயையும் இந்தியக் கிரிக்கெட் சபை விற்றுள்ளது. நிகழாண்டு ஐபிஎல் தொடர் நடைபெறாத நிலையில், 400 கோடி ரூபாய் வரை அதிலும் இழப்பு ஏற்படும்.

மேலும் வீரர்களின் தலைக்கவசத்தில் விளம்பரம் செய்ய 1 கோடி ரூபாய், உடை முன்பக்கம் விளம்பரத்துக்கு 5 கோடி ரூபாய், தோள்பட்டையில் விளம்பரம் செய்ய 2.5 கோடி ரூபாயும் வருவாயாக கிடைக்கும். இவற்றையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இழக்கும்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரின் 13ஆவது பருவகாலத்திற்கான போட்டிகளை மார்ச் 29ஆம் திகதி தொடக்கம் மே 24ஆம் திகதி வரையில் நடாத்த தீர்மானித்திருந்தது.

எனினும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக முதற்கட்டமாக ஐ.பி.எல். தொடர், ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஜூலை 1ஆம் திகதி வரை எந்த தொழில்முறை கிரிக்கெட்டும் விளையாடப்படாது: இங்கிலாந்து கிரிக்கெட்!

கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக குறைந்தபட்சம் ஜூலை 1ஆம் திகதி வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் எந்த தொழில்முறை கிரிக்கெட்டும் விளையாடப்படாது என இங்கிலாந்து கிரிக்கெட் சபை உறுதிப்பட தெரிவித்துள்ளது.

அதே வேளை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள கிரிக்கெட் சபை கூட்டத்தில், நடப்பு ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 'த ஹன்ட்ரட்' கிரிக்கெட் தொடரின் எதிர்காலம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.



கொவிட் -19 தொற்றுநோய் அச்சுறுத்தல் காரணமாக மே மாதம் 28ஆம் திகதி வரை எந்த கிரிக்கெட்டையும் விளையாட மாட்டோம் என்று ஆளும் குழு முன்பு அறிவித்திருந்தது. ஆனால் அந்த திகதி தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

அன்று(வியாழக்கிழமை) நடைபெற்ற கிரிக்கெட் சபை கூட்டத்தில், இந்த கோடையில் சில கிரிக்கெட் சாத்தியமானால் ஆங்கில பருவத்தை கணிசமாக மறுசீரமைக்கும் பல நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தது.

போட்டிகளைத் தொடங்கினால், போட்டிகளில் ஈடுபடும் அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக மைதானத்தில் ஆதரவாளர்கள் இல்லாமல் மூடிய கதவுகளுக்குப் பின்னால் அவை விளையாடப்படும்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை, ஏற்கனவே இதுபோன்ற நிகழ்வுகளுக்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளது, ஆனால் எந்தவொரு போட்டிகளும் நடைபெறுவதற்கு முன்பே அரசாங்க ஒப்புதல் அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.




## மொசாம்பிக்கிற்கு 309 மில்லியன் டொலர் அவசர உதவி!

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு மொசாம்பிக்கிற்கு 309 மில்லியன் டொலர் அவசர உதவி வழங்குவதாக சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) அறிவித்துள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கை கடந்த ஆண்டு தாக்கிய சக்தி வாய்ந்த சூறாவளியினால் ஏற்பட்ட இழப்பினையும் கருத்திற் கொண்டு இந்த தொகை வழங்கப்பட்டுள்ளது.




இதுகுறித்து சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தொற்றுநோய் மொசாம்பிக்கின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இது 2019ஆம் ஆண்டில் தாக்கிய இரண்டு சக்திவாய்ந்த வெப்பமண்டல சூறாவளிகளுக்குப் பிறகு வளர்ந்து வரும் மீட்சியை நிறுத்துகிறது' என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 4ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை மொசாம்பிக்கில் நிலைக்கொண்டு மிகப்பெரிய அழிவினை ஏற்படுத்திய 'தென்மேற்கு இந்தியப் பெருங்கடலில் மிக மோசமான வெப்பமண்டல சூறாவளியில்' 1303பேர் உயிரிழந்தனர். பலர் பாதிக்கப்பட்டனர்.

நிமிடத்துக்கு 195 கி.மீ வேகத்தில் வீசிய இந்த சூறாவளி, மலாவி, வடக்கு மடகாஸ்கர், சிம்பாப்வே ஆகிய நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுநோயால் மொசாம்பிக்கில் இதுவரை 65பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 12பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## மே மாத நடுப்பகுதியில் வழமைக்கு திரும்ப தயாராகும் பெல்ஜியம்!



பெல்ஜியத்தில் எதிர்வரும் மே 4ஆம் திகதி முதல், கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினை தடுப்பதற்காக விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என பிரதமர் சோஃபி வில்ம்ஸ் தெரிவித்துள்ளார்.

அன்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவில் நடைபெற்ற விஷேட ஊடக சந்திப்பிலேயே, அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'இது கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த மார்ச் நடுப்பகுதியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டினை எளிதாக்கும்.

மே மாதம் 11ஆம் திகதி முதல் வணிகங்கள் மீள திறக்கப்படும். மே 18ஆம் திகதி முதல் பாடசாலைகள் தொடங்கும். வைரஸின் பரவல் குறைந்துவிட்டது. ஆனால் வைரஸ் மறைந்துவிடவில்லை. மருத்துவமனைகளில் போதுமான குறைவு ஏற்பட்டுள்ளது என்று நிபுணர்கள் முடிவு செய்தால், கட்டுப்பாட்டினை எளிதாக்குவதற்கான பல்வேறு கட்டங்கள் இன்னும் தாமதமாகலாம்.

வணிகங்கள் மீண்டும் திறக்கும்போது சமூக தூரத்தை மதிக்க வேண்டும். ஜூன் 8ஆம் திகதி முதல் மட்டுமே உணவகங்கள் மீண்டும் திறக்கத் தொடங்கும். கஃபேக்கள் மற்றும் மதுக்கடைகளுக்கு ஒரு கால அட்டவணை அமைக்கப்படவில்லை.பாடசாலைகளை பொறுத்தவரை, சில வகுப்புகள் மே 18ஆம் திகதி திங்கள் முதல் ஆரம்பிக்கப்படலாம்' என கூறினார்.

மேலும் வணிகங்கள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும். அத்தோடு, குடிமக்கள் அவர்களுடன் வசிக்காத இரண்டு நபர்களை சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், மக்களுக்கு இடையே பொருத்தமான இடைவெளி இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.11.5 மில்லியன் மக்கள் வாழும் நாட்டில் 44,293பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 6,679பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 10,122பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

## முக கவசத்தை எல்லோரும் அணிய வேண்டும் என்ற அவசியம் கிடையாது

முக கவசத்தை எல்லோரும் அணிய வேண்டும் என்ற அவசியம் கிடையாது என அவுஸ்ரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசன், தலைமை மருத்துவ அதிகாரி பிரண்டன் மர்பியுடன் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'கொரோனா தாக்கத்தின் முதல் நிலையை நாடு கடந்துள்ளது. மூச்சு திணறல், தொடர் இருமல், சளித் தொல்லை, காய்ச்சல், மூக்கில் நீர் வடிதல் போன்ற பிரச்சினை உள்ள அனைவருக்கும் நாடு முழுவதும் கொரோனா பரிசோதனை நடத்தப்படும். அப்போதுதான் அதன் தாக்கத்தை முழுமையாக கண்டறிய இயலும்.

முக கவசத்தை எல்லோரும் அணிய வேண்டும் என்ற அவசியம் கிடையாது. உடல் நலம் குன்றியவர்கள் மட்டும் அணிந்தால் போதும். இதனால் அவர்கள் மூலம் பிறருக்கு நோய் தொற்று பரவுவதை தடுக்கலாம். தற்போது மக்கள் பயன்படுத்தும் முக கவசங்கள் அனைத்துமே தரமானவை என்று கூற முடியாது. இவை மக்களுக்கு அசௌகரியம் தருபவையாகவும் உள்ளன.

அதேநேரம் விமான நிலையங்களில் முக கவசம் அணிவது கட்டாயமான ஒன்று. பாடசாலைகளில் மாணவ, மாணவர்கள் 1.5 மீட்டர் அல்லது 4.5 சதுர மீட்டர் சமூக இடைவெளி விதியை பயன்படுத்த வேண்டிய கட்டாயமில்லை.

பாடசாலைகளில் ஒரு மாணவரிடம் இருந்து இன்னொரு மாணவருக்கு கொரோனா பரவுவதாக கூறப்படுவதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. ஆனால் வீடுகளில் இருந்தபோதுதான் பெற்றோர் மூலம் அவர்கள் கொரோனாவுக்கு அதிகம் பாதிக்கப்பட்டு இருப்பது, தெரிய வந்துள்ளது' என கூறினார். அவுஸ்ரேலியாவில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு 15,071பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 530பேர் உயிரிழந்துள்ளனர்.

## கிருமிநாசினியை ஊசி வழியாக உட்செலுத்துவதா? ட்ரம்பின் கருத்தால் மருத்துவர்கள் அதிருப்தி!

கொரோனா வைரஸ்தொற்று சிகிச்சையாக கிருமிநாசினியை, ஊசிவழியாக உடலுக்குள் செலுத்தலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய கருத்துக்கு எதிராக, ரெக்கிட் பென்கிசர் நிறுவனம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கிருமி நாசினிகளுக்கு பெயர்போன டெட்டால், லைசால் ஆகியவற்றை தயாரிக்கிற ரெக்கிட் பென்கிசர் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'எந்தவொரு சூழ்நிலையிலும், எங்கள் கிருமி நாசினிகளை மனித உடலுக்குள் ஊசி வழியாகவோ பிற விதங்களிலோ செலுத்தக்கூடாது. இதில் தெளிவாக இருக்க வேண்டும். எங்களது எல்லா தயாரிப்புகளையும் போல கிருமிநாசினிகளையும், சுகாதார தயாரிப்புகளையும் அவற்றை என்ன நோக்கத்திற்காக, எப்படி பயன்படுத்த வேண்டும் என்று நாங்கள் வழிகாட்டி இருக்கிறோமோ, அப்படி மட்டுமே பயன்படுத்த வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் இந்த கருத்து அபத்தமாக இருப்பதாக அந்நாட்டு மருத்துவர்கள் கூறியுள்ளனர். கிருமிநாசினியை உடலுக்குள் செலுத்தினால், அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர். இந்நிலையில், அது 'கேலியாக' சொல்லப்பட்டது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



# வட கொரியா அதிபர் ‘ஹிம் ஜாங்’ கடந்த ஞாயிறு இறந்தாரா? தொடரும் மர்மங்கள்



ஏவுகணை சோதனை, அணுஆயுத சோதனைகன் நடத்தி பங்காளி தென்கொரியா முதல் வல்லரசான அமெரிக்கா வரை எரிச்சலடைய வைத்த நாடு. வடகொரிய அதிபர் கிம் ஜாங், சர்வதேச அரசியலில் விளையாட்டுப் பிள்ளையாக பார்க்கப்படுபவர். உலகின் உண்மையான இரும்புத்திரை நாடு இப்போது மட்டுமல்ல, எப்போதுமே வடகொரியாதான். சீனாவிலிருந்து, கூட ரகசியங்களை கறந்து விடலாம். ஆனால், வடகொரியாவில் காளைமாட்டிலிருந்து பால் கறந்த கதைதான்! இந்தக் குட்டி நாட்டில் என்ன நடக்கிறது என்பதை உலக மக்களால் அறிந்துகொள்ளவே முடியாது. ஏன்? கொரோனா அங்கே பரவியிருக்கிறதா? இல்லையா என்பதைக்கூட உலகத்தால் அறிந்துகொள்ள முடியவில்லையே! அப்படியிருக்கையில், அண்மையில் திடீரென்று ஒரு செய்தி பரவியது. வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் (கிம் ஜாங்) உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதாக அந்தச் செய்தி சொன்னது. அதிகப்படியான சிகரெட் குடித்தல், உடல் பருமன் மற்றும் தொடர் பணிகளால் ஏற்பட்ட மனஅழுத்தத்தால் கிம்ஜாங்குக்கு இதய நோய் ஏற்பட்டதாகவும் அதற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்ட பின், உயிருக்கு அவர் போராடிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் உலவுகின்றன. இன்னுமொரு புறம் இவர் இறந்துவிட்டதாகவும், கடந்த ஞாயிறு அதாவது கடந்த வாரம் இறந்திருப்பதாகவும் சில செய்திகள் குறிப்பிடுகின்றன.

ஆனால், இந்தச் செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை. வடகொரிய அதிபர்களை மன்னர்களைபோலத்தான் அந்த நாட்டு மக்கள் பார்க்கிறார்கள். மன்னர் செயலுக்கு எந்த எதிர்ப்பும் அந்த நாட்டில் இருக்காது. கடவுள் போலத்தான் வடகொரிய மக்கள் தங்கள் தலைவரை பூஜிக்கின்றனர். வடகொரிய மக்கள் வறுமையில் உழன்று கொண்டிருந்தாலும், அதிபர் பிரான்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த விஸ்கியை அருந்திக்கொண்டிருப்பார். வடகொரிய அதிபருக்கு உலகின் பிரசித்திபெற்ற விஸ்கிகளை இறக்குமதி செய்து தர.. அவரை சந்தோஷமாக பார்த்துக்கொள்ள தனியாக குழுவே இயங்கிக்கொண்டிருக்கும். உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு அடையாளம் இருக்கும். வடகொரியாவின் அடையாளம் இதுவே!

கடந்த 1972- ம் ஆண்டு வடகொரியாவை உருவாக்கியவர் கிம் இல் சுங். இவர், தற்போதைய அதிபர் கிங் ஜாங்கின் தாத்தா. ஒவ்வொரு ஏப்ரல் 15-ம் திகதியும் நடைபெறும் கிம் இல் சுங்கின் பிறந்த தின விழாவை, வடகொரிய மக்கள் உற்சாகமாகக் கொண்டாடுவார்கள். அன்றைய தினம் அரசு விடுமுறை. வடகொரிய அதிபர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்கள். முதன்முறையாக, இந்த 15- ம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் பங்கேற்கவில்லை. இதுதான், அவரின் உடல் நிலை குறித்த சந்தேகத்தை உலக நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது. கிம் ஜாங் மூளைச்சாவு அடைந்துவிட்டதாக சி.என். என் செய்தி கூறுகிறது. பொதுவாகவே, வடகொரிய அதிபர்கள் அதிகமாக மது அருந்துபவர்களாகவும் சிகரெட் பிடிப்பவர்களாகவும் இருந்துள்ளனர். கிம் ஜாங்கின் தந்தை கிம் ஜாங் இல் 2011-ம் ஆண்டு இதே காரணத்தால், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். ஐரோப்பிய கண்டத்தில் படித்துக்கொண்டிருந்த ஹிம் ஜாங் உன்’ வடகொரியா திரும்பி அதிபராக பொறுப்பேற்றார்.

பதவியேற்ற பிறகு, ஏவுகணை சோதனை, அணுஆயுத சோதனை என்று கிம் ஜாங் பிசியாக இருந்தார். அவ்வப்போது, அமெரிக்காவையும் சீண்டுவார். இந்த விளையாட்டுப்பிள்ளையிடம் மோதிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், கைக்குள் போட்டுக்கொள்வதே நல்லது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நினைத்தார். விளைவாக? கடந்த ஆண்டு தென்கொரியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட டொனால்ட் ட்ரம்ப் அப்படியே வடகொரியாவுக்கும் விசிட் அடித்தார். தென்கொரிய , வடகொரிய எல்லைப்பகுதியில் ட்ரம்ப்பை கிம் ஜாங் சந்தித்துப் பேசினார். வடகொரியாவுக்கு விசிட் அடித்த முதல் அதிபர் என்ற பெருமையும் ட்ரம்ப்புக்குக் கிடைத்தது. இந்நிலையில் தற்போது, கிம்ஜாங்குக்கு உடல்நிலைக் கோளாறு இருந்ததால், அதிலிருந்து மீண்டு வர ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார். எப்போதுமே, வடகொரியா குறித்து தென்கொரியாவிலிருந்துதான் முதலில் செய்திகள் கசியும். கிம் ஜாங்கின் உடல் நிலை குறித்தும் தென்கொரிய இணையதளம் ஒன்றுதான் முதலில் செய்தி வெளியிட்டது.

ஆனால், பல நேரங்களில், வடகொரியா குறித்து தென்கொரியா வெளியிடும் செய்திகள் தவறாகவே இருந்துள்ளன நிரூபிக்கப்பட்டும் உள்ளன. இதற்கு சிறிய உதாரணத்தையும் சொல்ல முடியும். கடந்த 2015-ம் ஆண்டு, வடகொரியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஹ்யோன் மரணதண்டனை விதிக்கப்பட்டு, துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தென்கொரிய மீடியாக்கள் தெரிவித்தன. வடகொரியா அதிபர் கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில், ஹ்யோன் உறங்கிக்கொண்டிருந்ததால், மரண தண்டனை விதிக்கப்பட்டதாக விளையாட்டுத்தனமாக காரணத்தையும் தென்கொரிய மீடியாக்கள் கூறின. ஆனால், சில மாதங்களில் ஹ்யோன் வடகொரியாவின் தொலைக்காட்சியில் தோன்றிப் பேசினார். வடகொரியாவைப் பொறுத்தவரையில், உயர்பதவியில் இருக்கக் கூடிய ஒருவர் குற்றமிழைத்து, மரணதண்டனை வழங்கப்பட்டால் அவரைப் பற்றிய அத்தனை ஆவணங்களும் அழிக்கப்பட்டு விடும். கொல்லப்பட்ட நபர் குறித்த வீடியோக்களும் அவர் குறித்தான பாஸிடிவான செய்திகளும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பத் தடை விதிக்கப்படும். ஆனால், ஹ்யோன் மீண்டும் தோன்றியதும் அந்தச் செய்தியின் நம்பகத்தன்மை கேள்விக்குறியானது. மேற்கத்திய தாக்கம் நிறைந்த தென்கொரியா வேண்டுமென்றே வடகொரியா குறித்து அவதூறுகளைப் பரப்புகிறது என்று சொல்பவர்களும் உண்டு.

வடகொரியா குறித்தான செய்திகளை உலகில் எந்த உளவுதுறையும் அதிகாரபூர்வமாகவும் ஆதாரத்துடனும் வெளியிடவும் முடியாது. வடகொரியா குறித்த செய்திகளை அந்நாட்டு அரசு ஊடகம் மட்டுமே வெளியிடும். ஆனாலும் வடகொரியா தொடர்பான செய்திகள் பல சமயம் உலகளவில் விவாதப்பொருளாக மாறி இருக்கிறது. கடந்த வருடம் நிகழ்ந்த கிம் ஜாங் -ட்ரம்ப் சந்திப்பு தோல்வியில் முடிந்ததால், இந்த சந்திப்பு ஏற்பட காரணமாக இருந்த வடகொரியாவின் 5 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டுவிட்டதாகவும் கிம் ஜாங் மொழிபெயர்ப்பாளராக இருந்தவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தென்கொரிய ஊடகங்கள் தெரிவித்தன. இதுவெல்லாம் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள்தான். என்றாலும் சர்வதேச நாடுகளின் கவனத்தை பெற்ற செய்தியானது.

வட கொரியா பற்றிய தவறான புரிதலுக்கு அந்த நாட்டின் கடந்த கால வரலாறு விசித்திரமாகவும் வித்தியாசமாகவும் இருந்துள்ளதும் காரணம் ஆகும். வடகொரியாவை உருவாக்கிய கிம் இல் சுங் சோவியத் யூனியன் ஸ்டாலினின் தீவிர விசுவாசி. ரஷ்யாவில் ஸ்டாலின் தன் ஆட்சிக்கு எதிராக யார் திரும்பினாலும், சொந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், தயவு தாட்சண்யம் பார்க்காமல் மரணதண்டனை அளிப்பார். அதே மாதிரியான சிந்தனை வடகொரியாவின் கிம் இல் சுங் தொடங்கி தற்போதைய அதிபர் கிம் ஜாங் உன் வரையில் அனைவருக்கும் இருக்கிறது என்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் கூற்று. அதனாலேயே, வடகொரியா குறித்து வெளியாகும் பல செய்திகள் உறுதியாக நம்பமுடியாத போதும், உண்மையாக இருக்குமோ என்கிற எண்ணம் உலக மக்களிடத்தில் ஏற்படுகிறது.

தற்போதைய நிலையில் கிம் ஜாங் உடல் நிலை மோசமடைந்தால், வடகொரியாவின் அடுத்து அதிபராக யார் பதவியேற்பார்கள் என்கிற கேள்வி எழுந்துள்ளது. வடகொரியாவில் வசிக்கும் 2.5 கோடி மக்களுக்கு கிம் ஜாங் கடவுள் போன்றவர். அதிபர் நல்லவரா கெட்டவரா? நமக்கு நன்மை செய்கிறாரா இல்லையா? என்றெல்லாம் யோசிக்கும் மக்கள் வடகொரியர்கள் அல்ல. கிம் ஜாங் உயிருக்கு ஏதாவது நேர்ந்தால், வடகொரியாவை தோற்றுவித்த கிம் இல் சுங்கின் ரத்தவழி பந்தங்களைத் தவிர மற்றவர்களை அதிபர்களாக வடகொரிய மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். 70 ஆண்டுக்காலம் இந்தக் குடும்பம்தான் வடகொரியாவை ஆண்டு வந்திருக்கிறது. மக்களின் அதிகப்படியான பாசமும், நம்பிக்கையும்தான் வட கொரிய அதிபர்களை எப்போதுமே சர்வாதிகாரிகளாக நடமாட வைத்துள்ளது. அதனால், கிம் ஜாங்கின் இளைய சகோதரி கிம் யோ ஜாங் அடுத்த வடகொரிய நிர்வாகியாகப் பதவியேற்க 90 சதவிகித வாய்ப்பு இருக்கிறது. வடகொரியாவின் நம்பர்- 2 இப்போது இவர்தான். சமீப காலமாக, கிங் ஜாங் தலைமையில் நடைபெறும் அனைத்து முக்கியக் கூட்டங்களிலும் சகோதரிக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்ததையும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் - கிம் ஜாங்கின் சந்திப்பின்போதும், கிம் யோ உடனிருந்தார்.

வடகொரிய அதிபர் கிம் ஜாங்குக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் உண்டு. அவர்களின் பெயர் கிம் ஜாங் நம் மற்றும் கிம் ஜாங் சோல். சீனாவுக்கு உட்பட்ட மக்காவு பிராந்தியத்தில் வசித்துவந்த கிம் ஜாங் நம் , 2017-ம் ஆண்டு கோலாலம்பூர் விமான நிலையத்தில், ரகசிய ஏஜெண்டுகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக்கொலையின் பின்னணியில் கிம் ஜாங் இருந்ததாகச் சொல்லப்பட்டது. மற்றொருவரான கிம் ஜாங் சோல் அரசியலில் ஆர்வம் காட்டவில்லை. கிட்டார் கலைஞரான இவர், எரிக் கிளாப்டன் இசைக்குழுவில் சேர்ந்து பணியாற்றியுள்ளார். கிம் ஜாங்குக்கு குழந்தைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்களின் புகைப்படங்கள் கூட வெளியே வந்தது கிடையாது. குழந்தைகள் சிறு வயது கொண்டவர்களாக இருந்தால், ஆட்சி அதிகாரத்தில் அமர வைக்க முடியாத சூழல் உள்ளது. இதனால், வடகொரியாவின் நிர்வாகத்தை கிம் ஜாங்கின் சகோதரி கிம் யோ பார்ப்பார் என்பதே ஊகமாக இருக்கிறது. ஆனால், வடகொரிய மக்கள் இதுவரை பெண் அதிபரைக் கண்டதில்லை. அதனால், கிம் யோ ஜாங்கை ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.04.2020 அன்று வெளியிடப்பட்டது.